விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பதின்னான்கு

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 ஆனி 26 வெள்ளிக்கிழமை (10.07.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 203

SATS-TECH ENGINEERS (PVT) LTD
0114562929, 0212228812, 0212225908
dish tv
1 Year Subcription free with All Tamil + All sports
Including Setmax, Pogo,Cartoon network BBC,CNN

# பொருட்களை அதிக விலையில் யாழ்.வர்த்தகர்கள் விற்கின்றனர்



## யாழ்.வந்த அமைச்சர் குற்றச்சாட்டு வணிகர் கழகம் மறுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண வர்த்தகர்கள் பொருட்களை அதிகளவு விலையில் விற்பனை செய்வதாக தபால் தொலைத்தொடர்பு அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே குற்றம் சாட்டினார். இக் குற்றச்சாட்டை யாழ். வணிகர் கழக பிரதிநிதிகள் அடியோடு மறுத்ததுடன் நியாய விலையிலேயே யாழ்ப்பாணத்தில் பொருட்களை விற்பனை செய்வதாகத் தெரிவித்தனர். (14ஆம் பக்கம் பார்க்க)

## உதவி நிறுவனங்களின் பணிகளை குறைக்குமாறு அரசு திடீர் உத்தரவு

(கொழும்பு)

போர் முடிந்துவிட்ட நிலையில் உதவி நிறுவனங்கள் அவர்களின் நடவடிக்கைகளைக் குறைத்துக் கொள்ளவேண்டியது அவசியம் என்று இலங்கையின் மனித உரிமைகளிற்கான அமைச்சர் மகிந்த சமரசிங்க உதவி நிறுவனங்களிடம் கோரியுள்ளார்.

அரசின் இந்த முடிபின் மூலம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் உள்ளிட்ட உதவி நிறுவனங்கள் தமது பணிகளை இடை நிறுத்த வேண்டிய சூழ்நிலை உருவாகியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

அரசின் இந்த முடிபு குறித்து பி.பி.சியிடம் விளக்கிய அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்ததாவது,

போர் முடிந்துவிட்ட நிலையில் செஞ்சிலுவைச் சங்கம் ஏற்கெனவே செய்துகொண்டிருந்த அரச (14ஆம் பக்கம் பார்க்க)

## கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் யாழ்ப்பாணம் வருகிறார்

(யாழ்ப்பாணம்)

கல்வி அமைச்சின் கல்வி நிர்வாக சேவை மேலதிக செயலாளர் எம்.முகமட் தம்பி எதிர்வரும் 26 ஆம் திகதி யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவுள்ளார்.

இலங்கை அதிபர் சேவை தரம் 2-I இலிருந்து தரம் 1 க்கு பதவி உயர்வு வழங்குவதற்கான (14ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கு மாகாணத்திலிருந்து செஞ். சங்கம் வெளியேறியது

(கொழும்பு)

உதவி நிறுவனங்கள் தமது பணிகளை கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும் என அரசு விடுத்த வேண்டுகோளை அடுத்து கிழக்கு மாகாணத்திலுள்ள தமது நான்கு அலுவலகங்களையும் மூடிவிட்டு அங்குள்ள தமது வெளிநாட்டுப் பணியாளர்களை விலக்கிக் கொள்வதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் கூறியுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் செஞ்சிலுவைச் சங்கத்திற்கு 140 பணியாளர்கள் உள்ளார்கள். இந்த வெளியேற்ற நடவடிக்கை ஒரு முதற்கட்ட நடவடிக்கை எனக் கூறப்படுகிறது.

ஆனால் சமீபத்திய மோதலால் பாதிக்கப்பட்ட மக்கள் உள்ளிட்ட பொதுமக்கள் அனைவரிற்கும் உதவுவதில் தாம் உறுதியாக இருக்கிறோம் என செஞ்சிலுவைச் சங்கம் கூறியுள்ளது.

வட பகுதியில் நலன்புரி முகாம்களில் அரசால் தங்க வைக்கப்பட்டுள்ள சுமார் 2 இலட்சம் மக்களுக்கான தமது பணிகள் இந்த முடிபால் (14ஆம் பக்கம் பார்க்க)

## அதிபர் சேவை தரம் I இற்கான நேர்முகத் தேர்வு யாழ்ப்பாணத்தில்

### 27, 28ஆம் திகதிகளில் நடக்கும்

(கொழும்பு)

இலங்கை அதிபர் சேவை தரம் 2-I இலிருந்து தரம் 1 இற்கு பதவியுயர்வு வழங்குவதற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 27, 28 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடத்தப்படுமென கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் எம்.முகமட் தம்பி தெரிவித்தார்.

இது தொடர்பில் கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை அதிபர் சேவை தரம் 2-I இல் உள்ளவர்களை தரம் 1 இற்கு பதவியுயர்வு வழங்குவதற்கான (14 ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளே...

கொழும்பு ரோயல் கல்லூரி ஆசிரியர் குழுவினால் தயாரிக்கப்பட்ட க.பொ.த. உயர்தரப் பரீட்சை பொருளியல் பகுதி- I

## ஜனாதிபதியின் முடிபே அரசாங்கத்தின் முடிபு

### அமைச்சரவைப் பேச்சாளர் தகவல்



(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலின் பின்னரே நாட்டின் தேசிய பிரச்சினைக்கான தீர்வு முன்வைக்கப்படும் என்ற முடிபில் எவ்வித மாற்றமும் இல்லை. இந்த விடயத்தில் ஜனாதிபதியின் முடிபே அரசாங்கத்தின் முடி பாகும் என அமைச்சரவைப், (14ஆம் பக்கம் பார்க்க)

## நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் வடக்கில் விரைவில் அமுலாகும்

(யாழ்ப்பாணம்)

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் விரைவில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அமுல்படுத்தப்படவுள்ளதாக நுகர்வோர் விவகாரங்கள் அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்ற விசேட மாநாட்டிலேயே நுகர்வோர் விவகாரங்கள் அமைச்சர் இத் தகவலைத் (14ஆம் பக்கம் பார்க்க)

TVS புதிய அறிமுகம் TVS Scooty Streak 90CC
★ யாழ்.நகரில் முதல் முறையாக புதிய ஸ்கூட்டி ஸ்ரீக்
★ நீங்கள் விரும்பிய நிறங்களில் பெற்றுக் கொள்ளலாம்
TVS Company யின் ஏக விநியோகஸ்தர்
யசோ மோட்டோஸ்
163, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். T.P. No:- 021 222 7566




பருத்தித்துறை சாரதா சேவாச்சிரமத்துக்கு சென்ற இந்திய உயர்ஸ்தானிகர் அலோக் பிரசாத்தை, சுவாமி சித்ருபானந்தர் வரவேற்பதையும் அவருக்கு நூல் கையளிப்பதையும் படங்களில் காணலாம்.

# மூன்றாம் தவணை ஆரம்பமாகும் முன் முகாமிலுள்ள ஆசிரியர்கள் வெளியேறுவர்

(யாழ்ப்பாணம்)

பாடசாலைகளில் மூன்றாம் தவணை ஆரம்பம் ஆவதற்கு முன்னர் இடைத்தங்கல் முகாமில் உள்ள ஆசிரியர்களில் மிகப் பெரும்பான்மையானோர் முகாமிற்கு வெளியில் தங்க அனுமதிக்கப் படுவர் என கல்வி அமைச்சர் சுசில் பிறேம ஜெயந்த இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்திடம் உறுதியளித்தார்.

பொதுச் செயலாளர் த.மகாசிவம் தலைமையில் மூன்று பேர் அடங்கிய சங்கத்தின் தூதுக்குழு ஒன்று கல்வி அமைச்சரை கொழும்பில் சந்தித்து கலந்துரையாடிய போதே அமைச்சர் மேற்படி உறுதிமொழியை வழங்கினார்.

சங்கத்தூதுக்குழுவில் நிர்வாக செயலாளர் தி.கணேசராசா, மன்னார் மாவட்ட செயலாளரும் மத்திய குழு உறுப்பினருமான ஏ.மடுத்தீன் ஆகியோர் பங்கு பற்றினர்.

இதில் இடைத்தங்கல் முகாமில் உள்ள ஆசிரியர்கள், அதிபர்கள்,ஏனைய திணைக் கள நிர்வாகிகள், ஊழியர்கள் ஆகியோர் படிப் படியாக முகாமிற்கு வெளியே அனுமதிக்கப் படுவர்.

எனினும் முல்லைத்தீவு, மடு வலயக் கல்விப் பணிப்பாளர்களை விரைவில் முகாமிலிருந்து விடுவிக்கத் தேவையான நடவடிக் கைகளை தான் உடனடியாக மேற்கொள் வதாகவும் அமைச்சர் உறுதியளித்துள்ளார். (ச-5)

## சேப் கொலோராடோ கப்பல் இலங்கையை வந்தடைந்தது

வணங்காமண் கப்பலிலிருக்கும் நிவாரணப் பொருள்களை ஏற்றிய கேப் கொலோராடோ கப்பல் நேற்று வியாழக்கிழமை இலங்கையை வந்தடைந்துள்ளது.

நேற்றுக் காலை 10 மணியளவில் கொழும்புத் துறைமுகத்திற்கு கேப் கொலாராடோ கப்பல் வந்திருப்பதாக கூறிய செஞ்சிலுவைச் சங்கம் இந்த நிவாரணப் பொருள்கள் பொறுப்பேற்கப்பட்ட பின்னர் வவுனியா முகாம்களில் தங்கியிருக்கும் மக்களுக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் குறிப்பிட்டது.

புலம் பெயர்வாழ் தமிழர்களால் சேகரிக் கப்பட்ட நிவாரணப் பொருள்களை ஏற்றிக் கொண்டு இலங்கையை வந்தடைந்த வணங்கா மண் கப்பல் இலங்கை கடற் பரப்புக்குள் நுழைந்த போது கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருந்தது. இந்த நிலையில் இந்தக் கப்பல் சர்வதேச விதிமுறைகளை மீறியுள்ளதெனக் கூறி திருப்பியனுப்பப்பட்டிருந்த நிலையில் சென்னைத் துறைமுகத்தில் நங்கூரமிட்டிருந்தது.

இதற்கிடையில் வணங்காமண் கப்பலிலிருக்கும் நிவாரணப் பொருள்களை இலங்கையில் இறக்குவதற்கு இந்தியா இணங்கச் செய்ய வேண்டும் என தமிழக முதல்வர் மு.கருணாநிதி இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவிடம் கோரியிருந்தார்.

இதற்கான நடவடிக்கைகளை இந்தியா முன்னெடுக்குமென உறுதியளித்திருந்த நிலையில், இந்தியா சென்றிந்த இலங்கை ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் பசில் ராஜபக்ஷ தலைமையிலான குழுவினரிடம் கலந்துரையாடியிருந்தார்.

இந்த நிலையிலேயே வணங்காமண் கப்பலிலிருக்கும் நிவாரணப் பொருள்கள் கேப் கொலோராடோ கப்பலுக்கு மாற்றப்பட்டு இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டது. (ச-5)

## பிரதிக்கல்வி அமைச்சரின் யாழ்.விஜயம் இரத்து

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வி நிலைமைகள் மற்றும் நலன் புரி நிலையங்களிலுள்ள மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் தொடர்பில் ஆராய இன்று யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவிருந்த பிரதிக் கல்வி அமைச்சர் எம். சச்சிதானந்தன் சுகவீனம் காரணமாக வருகை தரமாட்டார் என யாழ். மேலதிக மாகாணக்கல்விப் பணிப்பாளர் வே.தி. செல்வரத்தினம் தெரிவித்தார்.

இவர் வேறு ஒரு தினத்தில் யாழ்ப்பாணத்திற்கு வருகை தருவார் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ச-5)

## வடமாகாண விளையாட்டுப் போட்டி
## கூடைப்பந்தாட்டத்தில் யாழ்.அணிகள் சம்பியன்

(யாழ்ப்பாணம்)

வட மாகாண விளையாட்டுப் போட்டிகளில் நேற்று நடைபெற்ற கூடைப்பந்தாட்டத்தில் ஆண்கள் பிரிவில் யாழ்.சென். ஜோன்ஸ் கல்லூரி அணியும், பெண்கள் பிரிவில் யாழ். திருக்குடும்ப கன்னியர்மடம் மகா வித்தியாலய அணியும் சம்பியனாகின.

வடக்கு மாகாண பாடசாலை மட்ட 2009 ஆம் ஆண்டிற்கான விளையாட்டுப் போட்டிகள் மன்னார் பொது விளையாட்டரங்கில் நடைபெற்று வருகின்றன.

இதில் நேற்று நடை பெற்ற ஆண்களுக் கான கூடைப் பந்தாட்டத்தில் யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரி சம்பியனானதுடன், யாழ். மத்திய கல்லூரி அணி இரண்டாமிடத்தையும் மன்னார் புனித சவேரியர் ஆண்கள் பாடசாலை அணி மூன்றாமிடத்தையும் பிடித்தன.

பெண்களுக்கான கூடைப்பந்தாட்டத்தில் யாழ். திருக்குடும்ப கன்னியர்மடம் மகா வித்தியாலய அணி சம்பியனானதுடன் உடுவில் மகளிர் கல்லூரி அணி இரண்டாமிடத்தையும் வவுனியா நெடுங்குளம் கலைமகள் வித்தியாலயம் மூன்றாமிடத்தையும் பெற்றன. (ச-5)

## வங்களாவடியிலிருந்து குறுந்தூர பஸ் சேவை

(யாழ்ப்பாணம்)

வேலணை வங்களாவடியிலிருந்து யாழ்ப் பாணத்துக்கான குறுந்தூர பஸ் சேவை ஒன்றை வடபிராந்திய போக்குவரத்து சபை மேற்கொண்டுள்ளது. தினமும் மாலை 4.30 மணிக்கு ஆரம்பமாகும் இவ் பஸ் சேவையின் மூலம் கடமை முடிந்து செல்லும் அரச ஊழியர்கள் நன்மை அடைவர் எனத் தெரிவிக் கப்பட்டுள்ளது. (ச)

## திறந்த பல்கலைக்கழக ஆங்கில தெரிவுப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாண பிராந்திய நிலையத்தில் 2009/10 கல்வியாண்டில் ஆங்கில மொழி கற்கை நெறியினை பயில்வதற்கு விண்ணப்பித்தவர்களுக்கான தெரிவுப் பரீட்சை நாளை 11 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணி தொடக்கம் 12 மணிவரை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் இராமநாதன் மண்டபம், வெளிவாரிப் பட்டப் படிப்புக்கள் பிரிவின் பரீட்சை மண்டபம் மற்றும் இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்ப் பாண பிராந்திய நிலையம் ஆகியவற்றில் நடைபெறும் என யாழ். பிராந்திய இணைப் பாளர் அறிவித்துள்ளார்.

இராமநாதன் மண்டபம் - 78012-78151, வெளிவாரிபட்டப் படிப்புகள் பிரிவின் பரீட்சை மண்டபம்- 78152-78211, 76537-76586, பிராந்திய நிலையம் யாழ்ப்பாணம் - 76587-76636 ஆகிய சுட்டிலக்க ஒழுங்கில் நடைபெறும். (ச)

## தடகள வீரர்கள் ஞாயிறன்று பயணம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண தடகளப் போட்டிகளில் கலந்து கொள்வதற்கு செல்லவுள்ள யாழ். மாவட்டப் பாடசாலை மாணவர்களை நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 5 மணிக்கு வலிகாமம் கல்வி வலயத்திற்கு பயண ஏற்பாடுகளுடன் வருகை தருமாறு வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் பா. விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார்.

மேற்படி பயணத்திற்கு வருகை தரும் மாணவர்கள் குடி நீரும் காலை உணவும் கொண்டு வருமாறும் அவர் கேட்டுள்ளார். (ச-5)

## மரண அறிவித்தல்
## திருமதி நடேசு பராசக்தி



கொடிகாமம், கோயிலாமனையைப் பிறப்பிடமாகவும், அச்சுவேலி தெற்கு, அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நடேசு பராசக்தி 03.07.2009 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா - சேதுப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும், பரமு நடேசுவின் அன்பு மனைவியும், ஆறுமுகநாதனின் அன்புச் சகோதரியும், லோகநாதன், இரவீந்திரன் (அச்சுவேலி தபாலகம்), கௌசலா, லோகநாயகி, சிவலோகநாதன், பரலோகநாதன், கங்காதரன், பிரபாகரன் ஆகியோரின் அன்புத்தாயாரும் கலாரஞ்சினி, சசிகலா, செல்வநேசன், அகிலானந்தன், சயிலா, ஜெயசுதா, ருஷ்யந்தி, சுபர்ணா ஆகியோரின் அன்பு மாமியும், யசிக்கா, ஜெனார்த்தனன், மிதுசனா, யதுசனா, துஜிந்தன், ஜெயசுதன், பிரதீப், ராகவி, ரஜீவ், சகானா, சாருஜன், சுருத்திகா, சுஜிக்கா, கிஷோர், பௌசன், மபிஷா, மபீனா, அகீசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (10.07.2009) நண்பகல் 12.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வல்லை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
ந.இரவீந்திரன் (மகன்)
(தபாலகம், அச்சுவேலி)
அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.

(2933)




நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயத்தின் மீது தாக்குதல் நடத்தப்பட்ட 14- வது ஆண்டு நினைவு தினம் நேற்று நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயத்தில் அனுஷ்டிக்கப்பட்டது. பலியானவர்களின் ஆத்ம சாந்தி வேண்டி ஆராதனை இடம்பெறுவதையும், குண்டுத் தாக்குதலில் பலியான 147 பொதுமக்களின் நினைவுச் சின்னத்தின் முன் உறவினர்கள் அஞ்சலி செலுத்துவதையும் படங்களில் காணலாம்.

# இன்று ஒரு தகவல்

## மனம் என்னும் பூதம்

ஒருநாள் ஒரு மனிதன் யோகியைத் தேடிப் போனான்.

"சாமி! நான் உழைத்து உழைத்து மிகவும் களைப்படைந்து விட்டேன். இருந்தாலும் இன்னும் என் வேலைகளெல்லாம் முடியவில்லை. எல்லா வேலைகளையும் செய்து முடிக்கும் சக்தி எனக்குக் கிடைக்க வேண்டும். அதற்கு நீங்கள் தான் வழி சொல்லவேண்டும்" என்றான்.

"அந்தச் சக்தியை நான் உனக்குக் கொடுத்து விடுவேன். இருந்தாலும் அது உனக்கு பெரிய இடையூறாக இருக்குமே" என்றார் யோகி.

"இருந்தாலும் பரவாயில்லை. அப்படி என்ன பெரிய இடையூறு வந்துவிடப் போகிறது. நீங்கள் அந்த சக்தியை எனக்குக் கொடுங்கள்" என்று கேட்டான் இவன். யோகி பார்த்தார். அருகில் வா என்று சொல்லி இவனுடைய காதோடு காதாக ஒரு மந்திரத்தை உபதேசம் செய்தார். அதை அவன் பாராயணம் செய்து முடித்ததும் ஒரு பெரிய பூதம் அவன் முன்னால் வந்து நின்றது.

"ஐயா... நான் உங்களுக்காக எல்லா வேலையும் செய்யக் காத்துக் கொண்டிருக்கின்றேன். ஆனால் ஒரு நிபந்தனை நீங்கள் நாள் முழுவதும் இடைவிடாமல் எனக்கு ஏதாவது வேலை கொடுத்துக் கொண்டே இருக்க வேண்டும். அப்படி எனக்கு வேலை எதுவும் இல்லாமல் போனால் உங்களையே விழுங்கி விடுவேன். அவ்வளவு தான்" என்றது.

அவன் பார்த்தான். வேறு வழியில்லை. சரி என்று ஒத்துக் கொண்டான்.

"சரி... வேலை கொடு" என்றது பூதம்

'எனக்கு ஒரு பெரிய மாளிகை வேண்டும்" என்றான். அடுத்த கணம் அவன் கண் முன்னால் ஒரு பெரிய மாளிகை உருவானது.

'எனக்கு ஒரு பெரிய தோட்டம் வேண்டும்' என்றான். அதுவும் உருவானது.

'குதிரை வேண்டும்' என்றான். வந்தது.

'யானை வேண்டும்' என்றான். வந்தது.

அவன் கொடுத்த எல்லா வேலைகளையும் அடுத்த விநாடியே செய்து முடித்தது பூதம்.

இனிமேல் சொல்வதற்கு ஒன்றுமில்லை. இவன் பார்த்தான். நிபந்தனையின் பிரகாரம் இவனை விழுங்குவதற்கு பூதம் நெருங்கி வந்தது. இவன் ஓட்டம் எடுத்தான்.

ஓடிப்போய் அந்த யோகியின் காலில் விழுந்தான்.

யோகி பார்த்தார். அவனுக்கு ஒரு வழி சொல்லிக் கொடுத்தார். சரி என்று கேட்டுக் கொண்டு அவன் மாளிகைக்குப் போனான். பின்னால் வாயைத் திறந்து கொண்டு பூதமும் போய்க் கொண்டிருந்தது.

அங்கே ஒரு பெரிய இரும்புத்தூண் வேண்டும் என்று பூதத்திடம் கேட்டான். உடனே தூண் வந்தது.

அதை நன்றாக மெருகேற்றி வழுவழுப்பாக ஆக்கச் சொன்னான். அதே மாதிரி ஆக்கியது பூதம். இப்பொழுது அவன் சொன்னான்.

"இதோபார். நீ என்ன செய்ய வேண்டும் என்றால் நான் நிறுத்தச் சொல்லும் வரைக்கும் இந்தத் தூணில் ஏறி இறங்கிக் கொண்டே இரு" என்றான்.

பூதம் அப்படியே செய்யத் தொடங்கியது.

அதன்பின்னர் இவன் தான் நினைத்த நேரத்தில் மட்டும் அந்தப் பூதத்தைக் கூப்பிட்டு வேலை வாங்குவான்.

எதற்கு இந்தக் கதை என்றால் மனிதனுடைய மனமும் சக்தி வாய்ந்த அவனுடைய சிந்தனையும் இந்தப் பூதத்துக்கு இணையானது. சரியான வேலை கொடுக்காவிட்டால் அது கெட்ட வழிகளில் செல்ல அவனைத் தூண்டிவிடும். அதனால் மனம் என்னும் பூதத்துக்கு வேலை இல்லாத போதெல்லாம் ஈஸ்வர தியானம் என்னும் தூணைப்பற்றிக் கொண்டே இருக்க வேண்டும் என்கிறார் சுவாமி சின்மயானந்தா.

ஆனால் நாமெல்லாம் ஏதோ ஒரு தூணைப் பற்றிக் கொண்டே இருக்கிறோம்.

ஒரு குடும்பஸ்தர் சொன்னார்.

"நான் எப்பொழுதும் சும்மா இருக்க மாட்டேன் சேர். எந்த நேரமும் என் மனைவி முன் நின்று ஏதாவது பேசிக் கொண்டு தான் இருப்பேன்" என்றார்.

"நிறுத்தவே மாட்டீர்களா?" என்றேன்.

"மாட்டேன்" என்றார்.

"ஏன்?" என்று கேட்டேன்.

"நான் நிறுத்தினால் அவள் பேச ஆரம்பித்து விடுவாளே! அதனால் தான்!" என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தால்
# வலய உத்தியோகத்தர்களுக்கான விழிப்புணர்வு செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் அடிப்படைக் கல்வித் திணைக்களத்தின் அடிப்படை கல்வித் துறை அலகினால் மேற்கொள்ளப்படுகின்ற பரிகாரக் கல்வி, உள சமூகத்துணை, அனர்த்த இட முகாமைத்துவம், இரண்டாம் தேசிய மொழி கற்பித்தல், சமாதானமும் விழுமியமும், ஆகிய செயற்கூறுகளை அமுல்படுத்துவதனால் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களை அவதானிக்கும் பொருட்டு அடிப்படைக் கல்வித் துறை அலகு (BESU) ஆளணியினர் ஒவ்வொரு வலயத்துக்கும் வருகை தந்து நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முதல் எதிர்வரும் 17 ஆம் திகதி வரை வலய உத்தியோகத்தர்களுக்கான விழிப்புணர்வு செயலமர்வு, அதிபர்களுக்கான விழிப்புணர்வு செயலமர்வு, பாடசாலை தரிசிப்பு, முதன்மை உளவளத் துணையாளர்களுடனான கலந்துரையாடல் ஆகிய செயற்பாடுகளை நடத்தவுள்ளனர்.

இதில் யாழ். மாவட்டத்திலுள்ள 5 வலயங்களைச் சேர்ந்த வலய உத்தியோகத்தர்ளுக்கான விழிப்புணர்வு செயலமர்வு நாளை மறுதினம் காலை 8.30 மணிமுதல் மாலை 4.15 மணி வரை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வுக்கு ஒவ்வொரு வலயத்திலிருந்தும் வலயக் கல்விப் பணிப்பாளர், கணக்காளர், பிரதேச கல்விப் பணிப்பாளர், விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம், தமிழ், ஆரம்பகல்வி, முறைசாராக் கல்வி ஆகிய பாடங்களில் உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் விஞ்ஞானம், கணிதம், தமிழ் ஆலோசனையும், வழிகாட்டலும், ஆரம்பக்கல்வி, முறைசாராக் கல்வி இரண்டாம் தேசிய மொழி ஆகிய பாடங்களுக்கான சேவைக் கால ஆலோசகர்கள் உட்பட 25 பேருக்கு மேற்படாமல் மொத்தம் 125 பேர் பங்குபற்ற வேண்டுமெனவும் உத்தியோகத்தர்கள் உரிய நேரத்திற்கு சமூகமளிக்க வேண்டும் எனவும் வட மாகாண கல்விப் பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (4)

# நூலகமும் தகவல் விஞ்ஞானமும் கற்கை நெறிக்கான மீள் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

இலங்கை நூலக சங்கத்தின் நூலக தகவல் விஞ்ஞான டிப்ளோமா பாடநெறி மட்டம் I இற்கான மீள் பரீட்சைகள் நாளை சனிக்கிழமையும் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமையும் நடைபெறவுள்ளது.

இப்பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாதவர்கள் உடனடியாக இணைப்பாளரை தொடர்பு கொள்ளுமாறு ஒருங்கிணைப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (6-17)

# இராசி பலன்

10.07.2009

(ஆனி 26, வெள்ளிக்கிழமை)

துருதியை முன்னிரவு 8.43 மணிவரை

திருவோணம் காலை 7.09 மணிவரை

இராகுகாலம் 10.28-11.58மணிவரை

சுபநேரம் 5.58-7.28 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | அதிக பிரயாசை, நண்பர்கள் உதவி, ஆரோக்கிய நிலை, முயற்சி கைகூடும். |
| இடபம் | புதிய திட்டமிடல், பயந்த சுபாவம், பிரயாணம், முயற்சி தாமதம். |
| மிதுனம் | வேலைச்சுமை, எதிரிகள் தொல்லை, முயற்சி தாமதம், உஷ்ணநிலை. |
| கடகம் | கௌரவமான நிலை, காரிய நன்மை, குடும்ப மகிழச்சி, தெய்வ தரிசனம். |
| சிங்கம் | தொழிலில் ஆர்வம், சத்துரு ஜெயம், காரிய நன்மை, பெரியோர் உதவி. |
| கன்னி | தெய்வசிந்தை, மனக்கிலேசம், முயற்சி தாமதம், பணக்குறைவு. |
| துலாம் | ரோகபயம், கல்வியில் நாட்டம், தாய்வழி உறவு, வாகன சுகம். |
| விருச்சிகம் | தெய்வ தரிசனம், காரிய நன்மை, வாகன சுகம், உறவினர் வருகை. |
| தனுசு | வேலைச்சுமை, காரிய தாமதம், தனவிரயம், ரோக நிலை. |
| மகரம் | தெய்வசிந்தை, நண்பர்கள் சந்திப்பு, எடுத்த காரியம் கைகூடும், நல்ல செய்தி. |
| கும்பம் | காரிய அலைச்சல், தெய்வ சிந்தை, போசன சுகம், சயன சுகக் குறைவு. |
| மீனம் | காரிய அனுகூலம், தன்னம்பிக்கை, கீர்த்தி, தெய்வ தரிசனம். |

வளவன்

# கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண வணிகர் கழகத்தினால் யாழ். குடாநாட்டு சகல மருந்தக, வாகன உதிரிப்பாகங்கள், கட்டடப் பொருட்கள், கணனி, மின் உபகரணங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் காலணி விற்பனையாளர்களுக்கும், விவசாய மற்றும் கடற்றொழில் வர்த்தக நடவடிக்கைகள் மேற்கொள்வோரும் மற்றும் எதிர்காலத்தில் செய்ய விரும்புவோருக்கும் கொழும்பிலிருந்து வருகை தரவுள்ள ஏற்றுமதி இறக்குமதியாளர்கள், கம்பனி மற்றும் தொழிற்சாலை உரிமையாளர்கள் கொண்ட உயர் மட்ட தூதுக் குழுவுடன் கலந்துரையாடல் ஒன்றை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இக் கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை யாழ். வணிகர் கழக அலுவலகத்தில் இடம்பெறவுள்ளதால் சகல வர்த்தகர்களையும் காலை 10.30 மணியளவில் சமூகமளிக்குமாறு யாழ். வணிகர் கழகம் கேட்டுக் கொண்டுள்ளது. (6)

# இணைப்பு அடிப்படையிலான விரிவுரையாளர்கள் பதவிகளுக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் இணைப்பு அடிப்படையில் விரிவுரையாளர் கடமைக்காக இலங்கை ஆசிரியர் சேவையிலுள்ள பின்வரும் பாடப்பரப்புகளுக்கு பொருத்தமான ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தொழில்சார் கல்வி (01), தமிழ் (02), கணிதம் (01), சித்திரம் (01), ஆரம்பக்கல்வி - விசேடக்கல்வி (01), தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (01), ஆங்கிலம் (02), சிங்களம் (02), மனைப் பொருளியல் (01),சமூகக்கல்வி (புவியியல்) -(01), இந்துசமயம் (01), இஸ்லாமிய சமயம் (01)

விண்ணப்பிப்போர் தமது பாடசாலை அதிபர், மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர்களூடாக சுய விபரத்தினை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன் கிடைக்கக் கூடியவாறு அதிபர், ஆசிரிய கலாசாலை, கோப்பாய் என்ற முகவரிக்கு தபாலில் அல்லது நேரில் அனுப்பி வைக்க வேண்டும் எனவும் நேரில் அல்லது தொலைபேசி வாயிலாக இது தொடர்பாக எவ்வித தொடர்புகளும் மேற்கொள்ளப்படமாட்டாது எனவும் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் மலர் சின்னையா தெரிவித்துள்ளார்.

தகுதியான விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு பொருத்தமானவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படவுள்ளனர்.

தெரிவு செய்யப்படுவோர் தமது பாடசாலை அதிபர், வலயக் கல்விப் பணிப்பாளர் ஆகியோரால் முறைப்படி விடுவிப்பு பெற்றுத் தருவதை உறுதிப்படுத்த வேண்டும் எனவும் இக்கலாசாலையில் பகுதி நேர விரிவுரைக் கடமைகளில் ஈடுபடுவோர் மற்றும் பயிற்சி பெற்ற முன்னாள் ஆசிரியர்கள் தொடர்பில் முன்னுரிமை வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் பட்டச் சான்றிதழ், கல்வி டிப்ளோமா, முது கல்வி மாணி மற்றும் பாடத்துறை சார்ந்த தொழிற் தகைமைகள், செயற்திறன்கள், சமூக இசைவாக்கம் என்பன முக்கியமாகக் கருதப்படும் எனவும் தெரிவு தொடர்பில் தேர்வுச் சபையின் முடிவே இறுதியானது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (6)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 20 | 30 | 30 |
| உருளைக்கிழங்கு | 100 | 110 | 90 |
| பச்சைமிளகாய் | 40 | 60 | 60 |
| தக்காளி | 300 | 400 | - |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 70 | 60 |
| கோவா | 160 | 170 | -- |
| கரட் | 20 | 60 | 80 |
| பூசணி | 30 | 40 | 25 |
| புடோல் | 40 | 50 | 25 |
| வாழைக்காய் | 50 | 60 | 55 |
| சின்ன வெங்காயம் | 50 | 60 | 30-40 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 90 |
| பாகற்காய் | 70 | 70 | 80 |
| வெண்டிக்காய் | 30 | 30 | 40 |
| கரணைக் கிழங்கு | 70 | 80 | - |
| பயிற்றங்காய் | 60 | 80 | 40 |
| லீக்ஸ் | 90 | 100 | 110 |
| பீற்றூட் | 30 | 50 | 60 |
| கறிமிளகாய் | 50 | 60 | 60 |
| முருங்கைக்காய் | 250 | 300 | 400 |
| கீரை - 1 பிடி | 10-20 | 15 | 15 |
| தேசிக்காய் | 100 | 120 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 20-25 | 25-30 | 25 |

# குடாநாட்டில் பொருட்களின் விலையை கட்டுப்படுத்த நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் அனைத்துப் பொருட்களுக்குமான விலையைக் கட்டுப்படுத்தி, நியாய விலையில் பொதுமக்கள் தமக்குரிய அத்தியாவசிய மற்றும் ஏனைய பொருட்களை கொள்வனவு செய்யக்கூடிய வகையிலான நிலையை ஏற்படுத்தும் நோக்கில் துரித முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

மேற்படி விடயம் தொடர்பில் ஜனாதிபதியுடன் கலந்துரையாடவுள்ளதாகவும் ஏ-9 தரைப் பாதையூடாக பாரவூர்திகளின் மூலம் பொருட்களைக் கொண்டு வருவதில் ஓர் ஒழுங்கமைப்பினை உருவாக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேநேரம் கப்பலில் கொண்டு வரக்கூடிய பொருட்களையும் பாரவூர்திகளில் கொண்டு வரக்கூடிய பொருட்களையும் இனங்கண்டு அதற்கேற்ற வகையில் திட்டமொன்றை வகுப்பதற்கும் அதிகளவில் பாரவூர்திகளை ஈடுபடுத்துவதற்கும், பாரவூர்திகளுக்கான நியாயமற்ற கட்டணங்களைத் தவிர்த்து நியாயமான கட்டணங்களுடன் பொருட்களைத் தருவிப்பதற்கும்,யாழ். பாரவூர்திகள் உரிமையாளர்கள் சங்க உறுப்பினர்களதும் யாழ்.வர்த்தக சங்கத்தினரதும் பாரவூர்திகளை மேற்படி பணியில் ஈடுபடுத்துவதற்கும் அதேநேரம் கோழிக் குஞ்சுகளைக் கொண்டு வரும் பாரவூர்திகளை ஈடுபடுத்துவதற்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா துரித நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

இதனடிப்படையில் இம்மாத இறுதிக்குள் மேற்படி நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்ட நிலையில் யாழ். மக்களுக்கு நியாயமான விலைகளில் அனைத்துப் பொருட்களை கொள்வனவு செய்ய இயலுமென அமைச்சர் நம்பிக்கை தெரிவித்துள்ளார். (6)

# முகாம்களிலுள்ள இடம் பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்த நடவடிக்கை எடுங்கள்

## இந்திய தூதுவரிடம் சுவாமி சித்ரூபானந்தர் வேண்டுகோள்

(பருத்தித்துறை)

நலன்புரி நிலையங்களில் உள்ள மக்களை அவர்கள் விரும்பும், சகல வசதிகளும் கொண்ட இடத்தில் குடியமர்த்த நடவடிக்கை எடுக்குமாறு இந்திய உயர்ஸ்தானிகர் அலோக் பிரசாத்திடம் பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த இந்திய உயர் ஸ்தானிகர் நேற்று முன்தினம் பருத்தித்துறை சேவாச்சிரமத்துக்கு சென்றார். அதன் போதே இவ்வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இந்திய உயர் ஸ்தானிகர் அலோக் பிரசாத்திடம் பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தர் கையளித்த மகஜரின் தமிழ் ஆக்கம் வருமாறு;

தூய அன்னை ஸ்ரீ சாரதா தேவியின் 117 ஆவது ஜன்ம தினத்தில் (31-12-69) ஓர் சிறிய குடிசையில் ஆரம்பிக்கப்பட்ட இவ் ஆத்மீகப் பணி இன்று சேவாச்சிரமம் தனது சொந்த நிலத்தில் 1971 ஆம் ஆண்டு தொடக்கம் பணி புரிந்து வருகின்றது.

இது வரைக்கும் மக்களின் துயர் துடைக்கும் பணிக்கு ரூபாய் 60இலட்சம் செலவிட்டுள்ளது:

சுவாமி விவேகானந்தர் யாழ்ப்பாணத்தில் ஆற்றிய உரையில் ஆத்மீகதானம் முதலிடத்தை வகிப்பதாகக் கூறினார்.

இதற்கு அமைய சுவாமி சித்ரூபானந்தர் குடாநாட்டில் 100 பாடசாலைகளுக்கு மேல் அங்கு சென்று ஸ்ரீ ராமகிருஷ்ணரின் வாழ்வும் வாக்கும் பற்றியும் தூய அன்னை ஸ்ரீ சாரதா தேவியின் அன்பு மொழிகள் பற்றியும் சுவாமி விவேகானந்தரின் ஆளுமை பற்றிய விழிப்புணர்வுகள் பற்றியும் மாணவர்கள் சமுதாயத்தின் மத்தியில் உரைகள் மூலமும், புத்தகக் கண்காட்சி மூலமும், சீ.டி. மூலமும் பணிபுரிந்தமை யாவரும் அறிந்ததே.

1998ஆம் ஆண்டு புரட்டாதி மாதத்தில் சுவாமி விவேகானந்தரின் கலாசார மண்டபத்திற்கு ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்துறவிகள் அடிக்கல் நாட்டினார்.

கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் ரூபாய் 09 இலட்சமும், அப்போதைய இந்திய உயர் ஸ்தானிகர் திருமதி நிருபமா ராவ் ரூபாய் 10இலட்சத்தையும் தந்துதவினார்கள்.

சேவாச்சிரமம் இவ் ஆன்மீகப் பணி மூலம் இளஞ்சிறார்களுக்கிடையில் நமது பண்டைய விழுமியங்களைச் செய்ய முடியும் என்ற காரணத்தால் நிறைவுறாத கட்டிடத்தை ஒப்பேற்ற ரூபாய் 50 இலட்சம் தேவைப்படுமென இந்திய உயர் ஸ்தானிகர் கௌரவ அலோக் பிரசாத் அவர்களிடம் வேண்டுதல் செய்தார்.

1983ஆம் ஆண்டு தொடக்கம் நடைபெற்ற போர் அனர்த்தங்களால் திண்டாடிய மக்கள் இறைவனின் அருட்பார்வையால் இன்று வேறு பரிமாணத்திற்கு சென்றுள்ளனர்.

மாண்புமிகு மகிந்த ராஜபக்ஷவும்,மேன்மையுள்ள இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களும் நலன்புரி நிலையங்களிலுள்ள மக்களை அவர்கள் விருப்பப்படி சகல வசதிகளும் கொண்ட இடத்தில் இனியும் காலந்தாழ்த்தாது குடியமர்த்தும் வண்ணம் கௌரவ இந்திய உயர் ஸ்தானிகரிடம் பணிவாகவும் அன்பாகவும் இதனை வேண்டுகின்றோம்.

சேவாச்சிரமம் என்றும் சிங்கள மக்களை சகோதர மனப்பான்மையுடன் பேணிவந்தது யாவரும் அறிவர்.

இலங்கை அரசாங்கத்தின் கீழ் நேர்மை மிக்க குடிமக்களாகவே இருந்து வருகின்றோம்.

இத்தருணத்தில் இந்திய அரசாங்கம் சேவாச்சிரமத்தின் பணிக்கு அவ்வப்போது உள்ள உயர்ஸ்தானிகர்கள் நேசக்கரம் கொண்டு உதவி புரிந்தமையை நாங்கள் என்றும் மறக்க வாய்ப்பில்லை.

தாங்கள் தக்க நடவடிக்கை எடுப்பீர்கள் என்றும் அன்னையின் பெயரால் இங்கு உள்ள யாவர்க்கும் எல்லா நலன்களும் உண்டாக அன்னையிடம் மனதாரப் பிரார்த்திக்கின்றோம் என்றுள்ளது.

(ச)

# பாலர் விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

உடுவில் இந்து இளைஞர் மன்றத்தின் பாலர் விளையாட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயத்தில் மன்றத் தலைவர் தி.தியாகச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மூளாய் INSGD பணிப்பாளர் திருமதி பொன்மலர் இராஜேந்திரன் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினராக யாழ். உடுவில் மான்ஸ் கல்லூரி பிரதி அதிபர் அ.பிரதாபன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (6-4)

# சிவில் அமைப்புகளுடனான கலந்துரையாடல்

2009 ஆம் ஆண்டு உள்ளூராட்சி வார நிகழ்வு தொடர்பாக சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட சிவில் அமைப்புக் களுடனான கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு சபையின் மாநாட்டு மண்டபத்தில் சபையின் செயலாளர் திருமதி குணமணி தேவி-ஆறுமுகம் தலைமையில் நடைபெறவுள்ளது. இதில் அனைவரும் கலந்துகொண்டு இவ் விடயம் சம்பந்தமான ஆலோசனைகளை வழங்கி உதவுமாறு சபை செயலர் அறிவித்துள்ளார். (6-29)

# ஆசிரியர் நியமனம் பெற செல்பவர்களுக்கு

தேசிய கல்வியியற் கல்லூரியில் பயிற்சி முடித்து ஆசிரிய நியமனம் பெறுவதற்கு பயணம் செய்பவர்கள் இன்று காலை யாழ். மேலதிக மாகாணக் கல்விப் பணிமனைக்குச் சமூகமளிக்குமாறு மேலதிக கல்விப் பணிப்பாளர் வே.தி. செல்வரத்தினம் அறிவித்துள்ளார். (5)




# எழுத்தாளர் கௌரவிப்பு

உள்ளூராட்சி வார நிகழ்வை முன்னிட்டு நூல் நிலைய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் எழுத்தாளர் தெல்லியூர் புலவர் சி.அமிர்தநாதக்குருக்கள் கௌரவிக்கப்படவுள்ளார்

மேற்படி நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை சபைச்செயலாளர் தலைமையில் இன்று காலை 9 மணிக்கு சபை மகாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக சபையின் செயலாளர் திருமதி கு.ஆறுமுகம் அறிவித்துள்ளார். (6-29)

# பல்கலைக்கழகத்துக்கு தெரிவானோர்

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் இருந்து 2008 ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் 19 பேர் 'Z' வெட்டுப்புள்ளி அடிப்படையில் பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகியுள்ளனர்.

இதில் விஞ்ஞானத் துறைக்கு 3 மாணவர்களும், வர்த்தகத்துறைக்கு 2 மாணவர்களும் கலைத்துறைக்கு 14 பேரும் தெரிவாகியுள்ளதாக கல்லூரி அதிபர் கே.ஆர். ராஜசேகரம் தெரிவித்துள்ளார். (4)



தேசிய உணவுவார நிகழ்ச்சித் திட்டத்தினை முன்னிட்டு யாழ்.மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தினால் இளைஞர்களுக்கு தெளிகருவியின் இயக்கமும் அளவிடுகை செய்தலும் தொடர்பாக பயிற்சி வழங்கப்படுவதையும், மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் சுற்றயல் பகுதி சிரமதானம் மூலம் சுத்தம் செய்யப்படுவதையும் படங்களில் காணலாம்.

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

அரியாலை பிரப்பங்குளம் மகாமாரி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை சனிக்கிழமை பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறவுள்ளது.

இவ் மஹோற்சவத்தில் எதிர்வரும் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு இரதோற்சவமும் மறுநாள் சனிக்கிழமை காலை 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் மாலை 4 மணிக்கு கொடியிறக்கமும் இடம் பெற வுள்ளது. (6-4)

✠✠✠

(யாழ்ப்பாணம்)

அச்செழு - கொக்கிருந்தபதி அருள்மிகு சிவகாமி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 15 ஆம் திகதி புதன்கிழமை காலை 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் 23 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 7 மணிக்கு சப்பறமும், 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு இரதோற்சவமும், மறுநாள் சனிக்கிழமை காலை 11.00 மணிக்கு தீர்த்தோற்சவமும் மாலை 5.30 மணிக்கு கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளது. (6-4)

✠✠✠

(கல்வயல்)

சாவகச்சேரி விளைவேலி தாளையம்பதி ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடை பெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு சப்பறமும், 20 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு இரதோற்சவமும், மறுநாள் செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளது. (4-31)

# பிரதிக் கல்வி அமைச்சர் தலைமையிலான குழுவினர் விஜயம்

கைதடி முத்துக்குமாரசாமி மகாவித்தியாலயத்தில் கல்விபயிலும் இடம்பெயர்ந்த மாணவர்களை பார்வையிடுவதற்கும் மாணவர்களின் பிரச்சினைகளை கேட்டறிந்து அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக பிரதி கல்வி அமைச்சர் கௌரவ சச்சிதானந்தன் தலைமையிலான குழுவினர் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலயத்திற்கு வருகை தரவுள்ளதாக தென்மராட்சி வலயக் கல்வி அலுவலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (6-4-29)

# உள்ளூராட்சி வார நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி வார நிகழ்வுகளுக்கான முன் நிகழ்ச்சித்திட்டங்கள் நேற்று வியாழக்கிழமை முதல் ஆரம்பமாகி 15ஆம் திகதி வரை நடைபெற்று வருகிறது.

இதில் இன்று வெள்ளிக்கிழமை காலை 9மணிக்கு முன்பள்ளி சிறார்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டி மீசாலை பொது நூலகத்தில் உள்ளூராட்சி வாரம் தொடர்பான கருத்தரங்கு, வர்த்தகர்களுக்கு இடையிலான போட்டி, சனசமூக நிலையங்களுக்கு இடையிலான போட்டி என்பனவும் காலை 10 மணிக்கு எழுத்தாளரைக் கௌரவிக்கும் நிகழ்வும்இடம்பெறவுள்ளது.(6-4-29)

# மாணவர்களுக்கான ஒன்றுகூடல்

(யாழ்ப்பாணம்)

மாகாண மட்ட மெய்வல்லுனர் போட்டியில் கலந்து கொள்ளவுள்ள தென்மராட்சிப் பகுதி பாடசாலை மாணவ வீர வீராங்கனைகள் நாளை சனிக்கிழமை மாலை 4 மணிக்கு முன்பதாக தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்தில் ஒன்று கூடுமாறு வலயக் கல்விப்பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (29)

# இடம்பெயர்ந்த மக்களை எந்தச் சட்டத்தின் கீழ் முட்கம்பி வேலி முகாம்களுக்குள் அடைத்துள்ளீர்கள்

## ஐ.தே.க. எம்.பி.லக்ஸ்மன் கிரியெல்ல கேள்வி



(கொழும்பு)

போரினால் பாதிக்கப்பட்ட நிலையில் உள்நாட்டில் இடம் பெயர்ந்துள்ள இந் நாட்டுப் பிரஜைகளை முட்கம்பிகளால் அமைக்கப்பட்ட வேலிகளுக்குள் முகாம்களிலே அடைத்து வைத்திருப்பது எந்த சட்டத்தின் கீழ் என்று ஐக்கிய தேசியக் கட்சி எம்.பி. லக்ஸ்மன் கிரியெல்ல கடந்த செவ்வாய்க்கிழமை சபையில் கேள்வி எழுப்பினார்.

யுத்தமற்ற, அழிவுகளற்ற நிலையிலான தீர்வினை முன்வைக்கவே நாம் முயற்சித்தோம். அது எதிர்க்கப்பட்டது. எவ்வாறாயினும் இன்றைய காலகட்டத்திலும் அதிகாரப் பரவலாக்கலுக்கு ஐக்கிய தேசியக் கட்சி பூரண ஒத்துழைப்பை வழங்கும் என்றும் அவர் கூறினார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்திற்கு நீடிப்பதற்கான பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு பேசுகையிலேயே கிரியெல்ல எம்.பி. இதனைத் தெரிவித்தார்.

இங்கு அவர் மேலும் கூறுகையில்,

பாகிஸ்தானில் அகதிமுகாம்கள் இருக்கின்றன. அந்த முகாம்களுக்குச் செல்ல சர்வதேச ஊடகங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆனால், வவுனியா முகாம்களுக்குச் செல்ல எவருக்கும் அனுமதி இல்லை.

வவுனியா முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளவர்களை பிச்சைக்காரர்களாக அரசு கருதக்கூடாது. நன்கு வசதியாக இருந்தவர்களும் அரச உத்தியோகத்தர்களுமே அங்கு முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இந்த முகாம்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு தனியார் துறைக்கும் சந்தர்ப்பம் அளிக்க வேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சி ஒருபோதும் பயங்கரவாதத்துக்கு ஆதரவாகப் பேசியதில்லை. நாட்டின் படுகொலைகள், குற்றச் செயல்கள் குறித்தே நாம் குரல் கொடுத்தோம். இன்று அகதி முகாம்களில் 15 வயதுக்கும் குறைந்த 80 ஆயிரம் சிறுவர்கள் இருப்பதாக அங்கு சென்று வந்த வைத்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த சிறுவர்கள் தொடர்பில் நாம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். உள்நாட்டில் இடம்பெயர்ந்த மூன்றி இலட்சம் பிரஜைகளை முட்கம்பிகளுக்குள் அடைத்து வைத்திருப்பது எந்தச் சட்டத்தின் கீழ் என்று கேட்க விரும்புகிறேன்.

அரசாங்கம் செய்கின்ற எல்லாச் செயற்பாடுகளையும் சரியென்று ஏற்றுக்கொள்ள முடியாது. அரசியலமைப்பு, மனித உரிமை ஆகியவை பாதுகாக்கப்பட வேண்டும். முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்கள் அதி விரைவாக குடியமர்த்தப்படவேண்டும்.

அந்த மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு 13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான சந்தர்ப்பம் நெருங்கி வந்துள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தை நாம் நன்றாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

நாம் யுத்தமற்ற ஒரு தீர்வை முன் வைப்பதற்கே 13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த முயற்சித்தோம். அந்த சந்தர்ப்பத்தில் எதிர்க்கட்சியில் இருந்த இன்றைய அரச தரப்பினர் இந்த முயற்சிக்கு எதிராக செயற்பட்டனர். இன்றைய காலகட்டத்திலும் ஐக்கிய தேசியக் கட்சி அதிகாரப் பரவலாக்கலுக்கு பூரண ஒத்துழைப்பை வழங்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். (6)

## இலங்கை மீனவர்கள் 53 பேர் விடுதலை

இந்திய கடலோரக் காவல் படையினரால் கைதுசெய்யப்பட்டு புழல் சிறையில் அடைக்கப்பட்ட இலங்கை மீனவர்கள் 53 பேர் நேற்றுமுன்தினம் விடுதலை செய்யப்பட்டனர். விடுவிக்கப்பட்ட இவர்களுடன், ஒன்பது படகுகளும் இந்தியக் கடலோரக் காவல் படையினரால் இலங்கை கடற்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு அனுராதபுரம் சிறையில் அடைக்கப்பட்டுள்ள இராமேஸ்வரம் மீனவர்கள் 21 பேரையும் அவர்களின் 5 படகுகளையும் விடுவிக்கக் கோரி இராமேஸ்வரம் மீனவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (6)

# சவூதி அரேபிய நிவாரணப் பொருட்கள் கொழும்பை வந்தடைந்தன

(கொழும்பு)

வவுனியா நிவாரணக் கிராமங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களுக்காக சவூதி அரேபிய அரசு வழங்கிய மனிதாபிமான உதவிகளில் முதல் தொகுதி நேற்று முன்தினம் கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வந்து சேர்ந்துள்ளது.

1000 கூடாரங்கள் மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருட்கள் அடங்கிய 100 மெற்றிக்தொன் எடையுள்ள நிவாரணப் பொருட்களை அரச அதிகாரிகள் நேற்று பொறுப்பேற்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மொத்தம் 33 கோடி ரூபா பெறுமதியான மனிதாபிமான உதவிகளை வழங்க சவூதி அரேபியா முன்வந்துள்ளது.

இந்த உதவியின் இரண்டாவது தொகுதியான மேலும் 100 மெற்றிக் தொன் எடை கொண்ட உதவிகள் விரைவில் விமானம் மூலம் இலங்கை வந்தடையும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (6)




யாழ்.பல்கலைக்கழக அரசறிவியல் ஒன்றியத்தினால் இடம்பெயர்ந்த மக்களுக்காக சேகரிக்கப்பட்ட ஒரு தொகுதி பொருட்களை ஒன்றியத் தலைவர் தி.விக்னேஸ்வரன் சாவகச்சேரி பிரதேச செயலாளர் ஸ்ரீநிவாசனிடம் கையளிப்பதனையும், அருகில் உதவிப் பிரதேச செயலாளர் எஸ்.அஞ்சலிதேவி, உதவி விரிவுரையாளர் எஸ்.துஷாலினி மற்றும் மாணவர்கள் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# உலக மக்களைக் கவர்ந்த ஒபாமா

# அடிமைச்சந்தையிலிருந்து வெள்ளை மாளிகை வரை

91

ஆனால் அவரின் அதிர்ஷ்ட தேவதை அவரை விட்டு நீங்கிய பின் அவரின் தயவால் நன்மை பெற்றவர்கள் அனைவரும் அவரைக் கைவிட்டனர். அவ்வரைப் பார்த்துச் சிரித்தனர். தங்கள் வீடுகளில் அவர் வந்து தங்கக் கூட அனுமதி மறுத்தனர். இது அவரின் மனதை வாட்டிய போதும் அதற்காக அவர் மனம் நோகவோ, குறைசொல்லவோ இல்லை. அவர் மீண்டும் தனது நிலையில் மாற்றம் ஏற்பட்டு உயர்ந்த போது தன்னை ஒரு காலம் வெறுத்து ஒதுக்கிய அவர்களுக்காகப் பரிந்து கருணை காட்டிய பெருந்தன்மை ஒப்பற்றது.

ஜெயிற்றூனி இத்தனையையும் ஒபாமாவுக்கு கூறியது ஏனென்றால் அவர் தன் தந்தையை நன்கு புரிந்துகொள்ளவேண்டும் என்பதற்காகவே அவர் கென்யாவில் பல விதமான அழுத்தங்களுக்கு முகம் கொடுக்க வேண்டியிருந்தது. அவரின் வாழ்விலிருந்து ஒபாமா ஒரு பாடத்தைக் கற்க வேண்டும்.

சராவிடம் போய் வந்தபின் ஒருநாள் ஔமாவும் ஒபாமாவும் வங்கியின் அருகில் பார்க்கிலே ஒபாமாவின் தந்தைக்கு வேண்டிய ஒருவரைத் தற்செயலாகச் சந்திக்க நேர்ந்தது. அவர் எடுத்த எடுப்பில் "ஹே ! நீ நன்றாக வளர்ந்துவிட்டாய். எப்போது அமெரிக்காவிலிருந்து வந்தாய்? உன் அம்மா எப்படி இருக்கிறாள்? உனது தம்பி மார்க் எப்படி?" என்று அவசரமாக விசாரித்ததும் ஒபாமா ஒரு கணம் குழம்பிப் போனார். இந்தக் கட்டத்தில் ஔமா தலையிட்டு குழப்பத்தை நீக்கினாள். "இவர் வேறு ஒரு சகோதரன். வேறு ஒரு தாயின் குழந்தை. இவரின் பெயர் பரக். அமெரிக்காவில் பிறந்து வளர்ந்து இப்போதுதான் முதல் முறையாக கென்யா வந்துள்ளார். டேவிட் இறந்துவிட்டான்" என்றாள் ஔமா.

தங்கள் மாடி வீட்டுக்கேகியதும் ஒபாமா தங்கை ஔமாவிடம் 'ருத்'தையும் அவளின் மகன் "மார்க்"கையும் எப்போது கடைசியாக கண்டாள் என்று விசாரித்தார். டேவிட்டின் மரணச் சடங்கு அன்று தான் கடைசியாகக் கண்டாள். அதற்கு முன்பிருந்தே அவர்கள் ஔமா குடும்பத்துடன் பேசுவதை நிறுத்தி விட்டார்கள்.

'ருத்'கிழவரை விவாகரத்துச் செய்த சம்பவம் மிகவும் கசப்பான நிகழ்வு. அதன் பின் அவள் தன்சனியா நாட்டைச் சேர்ந்த ஒருவனை மணந்தாள்.

மார்க்கையும் டேவிட்டையும் சர்வதேசக் கல்லூரியில் படிக்கவைத்தாள். வெளிநாட்டவர்களாக அவர்கள் வளர்க்கப்பட்டார்கள். ஒபாமாவின் குடும்பத்துடன் எல்லா உறவையும் அறுத்துவிட்டு தன்சனியனின் பெயரைத் தங்கள் தந்தை பெயராகக் கொள்ள குழந்தைக்குச் சொல்லிக் கொடுத்தாள்.



மார்க் ஒபாமாவின் குடும்பத்தோடு எந்த உறவும் கொள்ளவில்லை. ஆனால் டேவிட் ருத்துக்கெதிராகப் புரட்சி செய்தான். தான் ஆபிரிக்கன் என்றும் தான் ஒரு ஒபாமா என்றும் பெருமை பூண்டான். சிலவேளைகளில் யாருக்கும் தெரியாமல் பள்ளிக்கூடத்திலிருந்து நேரே கிழவரைப் பார்க்க வருவான். அப்படித்தான் ஒபாமா குடும்பத்தினர் அவனுடன் பழக ஆரம்பித்தனர். நாளடைவில் எல்லோருக்கும் அவனைப் பிடித்து விட்டது.

மிகவும் இனிய சுபாவம் உடையவன். சிலவேளைகளில் முரட்டுத்தனத்தையும் காட்ட அவன் தவறவில்லை. அதிலும் அவனிடம் தனி ஆணழகு இருந்தது.

ருத் அவனை விடுதி வசதியுள்ள ஒரு கல்லூரியில் படிக்க ஆவன செய்தாள். ஆனால் அவனோ அதில் இருந்து யாருக்கும் சொல்லாமல் தலைமறைவாகிவிட்டான்.

பல மாதங்களாக டேவிட்டை யாரும் காணவில்லை. ஒருநாள் ரக்பி பந்தாட்டப் போட்டி நடக்கும் இடத்தில் றோய் அவனைக் காண நேர்ந்தது. அழுக்கடைந்த மெலிந்த மேனியுடன் முன்பின் தெரியாதவர்களிடம் கையேந்தி காசு கேட்டுப் பிச்சையெடுத்துக் கொண்டு நின்றான்.

## ஜம்பொன்

றோயைக் கண்டதும் சிரித்து சமாளித்தான். தன் வாழ்க்கை மிகவும் ஹாயாகப் போவதாகக் கூறினான். வீட்டுக்குப் போகும்படி றோய் வலியுறுத்தியும், அவன் கேட்கவில்லை. ஆகவே அவனைத் தன்னுடன் அழைத்து வந்து தனது மாடி வீட்டில் தங்க வைத்தான். அதேநேரம் றோய் ருத்துக்குச் செய்தியனுப்பி டேவிட் பத்திரமாகத் தன்னுடன் தான் தங்கியிருக்கிறான் என்று சொல்லி வைத்தான். (தொடரும்)

# ராஜீவ்காந்தியின் தவறான வெளியுறவு கொள்கையால் இந்தியாவுக்கே பேராபத்து உருவாகும் நிலை

## பழ.நெடுமாறன் தெரிவிப்பு

(சென்னை)

இந்திராகாந்தி இருந்திருந்தால் இலங்கையில் தமிழர்கள் கொல்லப்படும் அவலம் ஏற்பட்டிருக்காது என தமிழர் பாதுகாப்பு இயக்க ஒருங்கிணைப்பாளர் பழ. நெடுமாறன் தெரிவித்துள்ளார்.

கோவை வழக்கறிஞர் சங்கம் சார்பில் வழக்கறிஞர் சங்க கூட்டரங்கில் சிறப்பு சொற்பொழிவு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

நிகழ்வில் அவர் மேலும் உரையாற்றுகையில், அமெரிக்கா தலைமையிலும், சோவியத் ரஷ்யா தலைமையிலும் உலகம் இரண்டாகக் காணப்பட்டது. இராணுவ உடன்பாட்டு நாடுகள் உருவாக்கப்பட்டது. 3 ஆம் உலகப் போர் வரும் என்ற அச்சம் நிலவிய போது அணி சேரா நாடுகள் கூட்டமைப்பை ஏற்படுத்தினார் ஜவஹர்லால் நேரு.

இதனால் 3 ஆம் உலகப்போர் தடுக்கப்பட்டது. ஒரு நாடு மற்றொரு நாட்டை ஆக்கிரமிக்கும் போது குரல் கொடுத்தது அப்போதைய இந்தியா.


நேருவை தொடர்ந்து இந்திரகாந்தியும் அணி சேரா கொள்கையை தொடர்ந்து கடைப்பிடித்தார். வாஜ்பாயும் பின்பற்றினார். ஆனால் ராஜீவ்காந்தி காலத்தில் கொள்கை அடியோடு மாற்றப்பட்டது.

இலங்கையில் சீனா, மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகள் காலூன்றி விட்டன. இலங்கை அரசின் இராணுவ வெற்றிக்கு 20 நாடுகள் உதவி செய்ததே காரணம் என்று அந்த நாடு கூறியுள்ளது. இலங்கையில் சீனா ஆயுத கிடங்கை திறக்க இலங்கை அரசு அனுமதி அளித்துள்ளது.

இந்திரா காந்தி இலங்கையில் இராணுவ தளம் அமைப்பதைத் தடுத்தார். ஆனால் இப்போது ஆயுத கிடங்கே திறக்கப்பட்டு உள்ளது. தென்னாசிய நாடுகளுக்கு ஆபத்து இது.

மேலும் இலங்கையில் உள்ள துறைமுகத்தை சர்வதேச துறைமுகமாக மாற்றும் குத்தகை சீனாவுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. தற்போது மன்னார் வளைகுடாவில் பெற்றோல் எடுக்கும் உரிமமும் சீனாவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இலங்கையில் சீனாவின் நுழைவு தென் மாநில பகுதியை பாதிக்கும் ஆபத்தாக மாறி விட்டது. இங்குள்ள அணுமின் நிலையங்களில் தாக்குதல் நடத்தினால் கதிர் வீச்சால் மிகப் பெரிய பாதிப்பு ஏற்படும். கூடங்குளத்தில் தாக்குதல் நடத்தினால் மதுரையை தவிர மற்ற தென் மாவட்ட பகுதிகளும், திருவனந்தபுரம் பகுதி வரை அழிவு ஏற்படும். ஆகவே ராஜீவ்காந்தி உருவாக்கிய தவறான வெளியுறவு கொள்கையால் இந்தியாவுக்கே பேராபத்து உருவாகும் நிலை ஏற்பட்டு விட்டது என்றார். (6)



# தமிழக மீனவர்களின் நங்கூரங்கள் பறிமுதல்

(மண்டபம்)

தமிழக மீனவர்களின் நங்கூரங்கள் கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

மண்டபம் வடக்கு பகுதியிலிருந்து கடந்த 6 ஆம் திகதி ஏராளமான விசைப் படகுகள் மீன்பிடிக்கச் சென்றன.

அவற்றில் நான்கை நடுக்கடலில் வழிமறித்த கடற்படையினர், மீனவர்களின் வலைகளை வெட்டி எறிந்து, மீனவர்கள் பிடித்த இறால், நண்டு, கணவாய், மீன்கள், நங்கூரங்களை பறித்துச் சென்றனர்.

இது குறித்து மீனவர்கள் கூறுகையில்,

கச்சதீவில் நிரந்தரமாக முகாமிட்டு தமிழக மீனவர்களை கண்காணிக்க ரோந்து கப்பல்களுக்கு நங்கூரங்கள் தேவைப்படுவதால் இவ்வாறு பறிமுதல் செய்யப்படுவதாக தெரிவித்தனர். (6)

# உள்நாட்டு விமானக்கட்டணங்களை குறைக்கக் கூடிய சாத்தியம் இல்லை

## தனியார் விமானசேவை நிறுவனங்கள்

(கொழும்பு)

உள்நாட்டு விமான சேவைக் கட்டணங்களை குறைப்பதில் பல்வேறு நடைமுறைச் சிக்கல்கள் காணப்படுவதாக தனியார் விமான சேவை நிறுவனங்கள் தெரிவித்துள்ளன. அரசாங்கத்தினால் விதிக்கப்படும் வரி மற்றும் ஏனைய கட்டணங்களினால் விமானக் கட்டணத்தை குறைக்கக் கூடிய சாத்தியம் இல்லை என குறிப்பிட்டுள்ளனர்.

சிவில் விமான போக்குவரத்து அதிகார சபைக்கு, தனியார் விமான போக்குவரத்து நிறுவனங்களுக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பின் போது இந்தக் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

கட்டணங்களை குறைக்குமாறு தாம் தனியார் விமான நிறுவனங்களிடம் கோரியதாக சிவில் விமான போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் தெரிவித்துள்ளார்.

வரி அறவீடுகளின் காரணமாகவே விமானக் கட்டணங்கள் மிகவும் உயர்வாகக் காணப்படுவதாக தனியார் விமான சேவை நிறுவனங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

எனவே வரி அறவீடுகள் குறைக்கப்படும் வரையில் விமானக் கட்டணங்களில் மாற்றம் ஏற்படுத்தக் கூடிய சாத்தியமில்லை என தனியார் விமான சேவை நிறுவனங்கள் தெரிவித்துள்ளன. விமானக் கட்டணங்களை குறைப்பது தொடர்பில் மேலும் ஒரு சுற்றுப் பேச்சு வார்த்தை நடத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (6)

# பிரபாகரன் மரண சான்றிதழுக்காக காத்திருக்கும் இந்திய அரசாங்கம்

(சென்னை)

விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன் மரணம் குறித்த முறையான அதிகாரப்பூர்வ தகவலை இலங்கை அரசிடமிருந்து எதிர்பார்த்து மத்திய அரசு காத்துக் கொண்டிருப்பதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது. கடந்த மே 19 ஆம் திகதி இலங்கையில் நடந்த போரில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரன் கொல்லப்பட்டு விட்டதாக செய்திகள் வெளியாகின. ஆனாலும் பிரபாகரன் மரணம் குறித்து பல்வேறு சந்தேகங்கள் கிளப்பப்பட்டு வருகின்றன.

பிரபாகரன் மரணம் குறித்து லோக்சபாவில் டி.ஆர்.பாலு நேற்று முன்தினம் கேள்வி எழுப்பியிருந்தார். விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன் இலங்கை இராணுவத்தால் கொல்லப்பட்டு விட்டதாகக் கூறப்படும் சூழ்நிலையில், அவரது மரணச் சான்றிதழ் குறித்து அந்நாட்டு அரசிடம் மத்திய அரசு கேட்டுள்ளதா? அவ்வாறு கேட்டிருந்தால் அந்த கோரிக்கை குறித்து அந்நாட்டு அரசு ஏதாவது பதிலளித்துள்ளதா? என்று கேட்டிருந்தார்.

டி.ஆர். பாலுவின் கேள்விக்கு எழுத்து மூலம் அளித்துள்ள பதிலில் வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா கூறியிருப்பதாவது,

முன்னாள் பிரதமர் ராஜிவ் படுகொலை வழக்கில் விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தார். எனவே, பிரபாகரன் மற்றும் விடுதலைப் புலிகள் உளவுப் பிரிவுத் தலைவர் பொட்டு அம்மான் ஆகிய இருவரது மரணங்களையும் இந்திய அரசு அதிகார பூர்வமாக உறுதி செய்ய வேண்டியுள்ளது.

இதற்காக இவர்கள் இருவரது மரணம் குறித்த அதிகாரபூர்வ தகவலை இலங்கை அரசிடம் மத்திய அரசு கேட்டுள்ளது. இருப்பினும் இதுகுறித்த அதிகாரப்பூர்வ தகவல் இலங்கை அரசிடமிருந்து மத்திய அரசுக்கு வரவில்லை.

அந்நாட்டு அரசிடம் இருந்து முறையான அறிவிப்பை எதிர்பார்த்து மத்திய அரசு காத்துக் கொண்டிருக்கிறது இவ்வாறு கிருஷ்ணா தனது பதிலில் கூறியுள்ளார். (ச-5)

# நாட்டில் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை அதிகரிப்பு

## அரச மருத்துவ அதிகாரிகள் அமைப்பு தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் டெங்கு நோயினால் பீடிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை உயர்வடைந்து வருவதாக அரச மருத்துவ அதிகாரிகள் அமைப்பு தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் வரை டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 15 ஆயிரத்து 319 ஆக அதிகரித்துள்ளது. டெங்கு நோயினால் மாத்திரம் இதுவரை 163 பேர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை முதல் செவ்வாய்க்கிழமை வரையான நான்கு நாட்களில் மாத்திரம் 569 பேர் டெங்கு நோயினால் பீடிக்கப்பட்டுள்ளனர். கொழும்பு, கண்டி, கேகாலை, கம்பஹா, குருநாகல் ஆகிய மாவட்டங்களிலேயே அதிகளவான டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். கண்டி மாவட்டத்தில் மாத்திரம் 2 ஆயிர த்து 237 பேர் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

டெங்கு நோய்த் தடுப்பு நடவடிக்கைகளில் அரசு கூடிய கவனம் செலுத்தி வருவதாகவும், நுளம்புகளை ஒழிப்பதிலும் தீவிரமாக செயற்பட்டு வருவதாகவும் மேற்படி அமைப்பின் பேச்சாளர் தெரிவித்தார்.

அத்துடன் பன்றிக் காய்ச்சலுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 25 ஆக உயர்ந்துள்ளது. வெளிநாடுகளில் இருந்து வந்தவர்களே பன்றிக் காய்ச்சல் தொற்றுக்கு ஆளாகியுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (6)

# இடம்பெயர்ந்த சிறார்களை பாதுகாக்க விசேட சிறுவர் பாதுகாப்புப் பிரிவு

(கொழும்பு)

இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கியிருக்கும் சிறுவர்களது நலன்களை உறுதிப்படுத்தும் நோக்கில் விசேட சிறுவர் பாதுகாப்புப் பிரிவொன்று உருவாக்கப்படவுள்ளது. காவல் துறையினர், சமூக சேவைகள் அமைச்சு அதிகாரி, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை அதிகாரிகள் ஆகியோர் இந்த பாதுகாப்பு குழுவில் அடங்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முகாம்களில் வாழும் சிறுவர் சிறுமியர் துஷ்பிரயோகங்களுக்கு உட்படுத்தப்படுவதனை தடுக்கும் நோக்கில் புதிய பாதுகாப்புப் பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது. சிறுவர் துஷ் பிரயோக சம்பவங்கள் குறித்து விசாரணைகள் நடத்தப்பட உள்ளதாகவும்தெரிவிக்கப்படுகிறது. (6)

# புலிகள் நடத்திய தாக்குதல்களினால் இறைவரித் திணைக்களத்திற்கு 104 கோடி நட்டம்

## அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தகவல்

வருமான வரித் திணைக்களம் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல்களினால் 104 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதென அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

கடந்த பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதி இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

வருமான வரித் திணைக்களத்தை புனர்நிர்மாணம் செய்வதற்கு சுமார் 104 கோடி தேவைப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது தற்காலிக கட்டடங்களில் இயங்கி வரும் வருமான வரித் திணைக்களத்திற்காக 21 கோடி ரூபா வாடகை செலுத்தப்பட்டுள்ளதென அவர் குறிப்பிட்டுள்ளார். (6)

# இலங்கையின் நீதித்துறையில் நிர்வாக சீர்திருத்தம்

## பிரதம நீதியரசர் அசோக் டி சில்வா தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் நீதித்துறை நிர்வாகத்தில் சீர்திருத்தங்கள் செய்யத் திட்டமிடுவதாக பிரதம நீதியரசர் அசோக் டி சில்வா தெரிவித்துள்ளார்.

இலங்கையின் நீதித்துறை அண்மையில் சர்வதேச அமைப்புகளால் விமர்சனங்களுக்கு ஆளான நிலையில் நீதியரசரின் இந்தக் கருத்து வெளிவந்துள்ளது.

இலங்கையின் நீதித்துறையில் பணி மாற்றங்கள் மற்றும் ஒழுங்கு நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் நீதிச் சேவைகள் ஆணையத்தில் விரைவில் மாற்றங்களை அறிவிக்க இருப்பதாகவும் பிரதம நீதிபதி டி சில்வா தெரிவித்துள்ளார்.

நீதித்துறையில் சிலர் கடந்த காலங்களில் சிறப்பு வசதிகளுடன் நடத்தப்பட்டு வந்திருந்தனர் என்றும் அவர் கூறினார்.

சர்வதேச நெருக்கடி தவிர்ப்பு குழு மற்றும் சர்வதேச சட்டத்தரணிகள் சங்கத்தின் மனித உரிமைகள் மையம் போன்றவை இலங்கையின் முன்னாள் தலைமை நீதிபதி சரத் என் சில்வாவையும் நீதிச் சேவைகள் ஆணையத்தை அவர் பயன்படுத்திய விதத்தையும் விமர்சித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (6)

# றோயல் கல்லூரி, கொழும்பு -7

## கல்வி பொதுத்தராதர உயர் தரப் பரீட்சை –2009

## வழிகாட்டல் பரீட்சை


பொருளியல் -I பகுதி-I Economics-I

1 மணித்தியாலம் 1 Hour

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
சரியான விடையின் கீழ் கோடிடுக.

01) எல்லா சமூகங்களினாலும் எதிர்நோக்கப்படும் அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினை என்ன?
1) பொருளாதார வளர்ச்சியை எப்படிப் பெறுவது
2) வறுமையை எப்படிக் குறைப்பது
3) வளங்களை எவ்வாறு ஒதுக்கீடு செய்வது
4) பணவீக்கத்தை எவ்வாறு கட்டுப்படுத்துவது
5) வேலையின்மை விதத்தை எவ்வாறு குறைப்பது

02) கணனி உற்பத்தியையும் தொலைபேசி உற்பத்தியையும் காட்டும் உற்பத்தி சாத்திய வளைகோடு வருமாறு




உற்பத்தி சாத்திய வளைகோடு AA யிலிருந்து AB என நகர்வதற்குக் காரணம் என்ன?
1) தொலைபேசிக்கான கேள்வி அதிகரித்தல்
2) தொலைபேசியின் விலையில் வீழ்ச்சி
3) ஒரு தொலைபேசியை உற்பத்தி செய்வதற்கான செலவு அதிகரித்தல
4) ஒரு தொலைபேசியை உற்பத்தி செய்வதற்கான செலவு குறைதல்
5) தொலைபேசியின் நிரம்பல் அதிகரித்தல்

03) உற்பத்திசாத்திய வளைகோடு பற்றிய பின்வரும் கூற்றுக்களில் மிகவும் பொருத்தமான கூற்று எது?
1) உற்பத்திசாத்திய வளைகோட்டின் எந்தவொரு புள்ளியும் உற்பத்தியில் வினைத்திறனையும் பங்கீட்டில் வினைத்திறனையும் வெளிப்படுத்தும்
2) உற்பத்திசாத்திய வளைகோட்டின் வலதுபுற நகர்வு உற்பத்தி அதிகரித்ததைக் காட்டுகின்றது.
3) உற்பத்திசாத்திய வளைகோட்டின் மீது அமைந்துள்ள எந்தவொரு புள்ளியும் வள ஒதுக்கீட்டில் வினைத்திறனைக் காட்டும்.
4)உற்பத்திசாத்திய வளைகோட்டின் மீது அமைந்துள்ள எந்தவொரு புள்ளியும் உற்பத்தியில் வினைத்திறனைக் காட்டும் ஆனால் வள ஒதுக்கீட்டில் வினைத்திறனைக் காட்டமாட்டாது
5) உற்பத்திசாத்திய வளைகோட்டின் மீது அமைந்துள்ள எந்தவொரு புள்ளியும் வள ஒதுக்கீட்டில் வினைத்திறனைக் காட்டும் ஆனால் உற்பத்தியில் வினைத்திறனைக்காட்டமாட்டாது.

04) சந்தைப்பொருளாதாரம் தொடர்பான மிகவும் பிழையான கூற்றைத் தெரிவு செய்க.
1)சந்தை முறைமை வெளிவாரி விளைவுகளைக் கவனத்தில் எடுப்பதில்லை.
2)அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகள் விலைமுறையின் மூலம் தீர்க்கப்படுகின்றது.
3)பொதுப்பண்ட உற்பத்திக்கு வளங்கள் வினைத்திறன் மிக்க வகையில் ஒதுக்கப்படுகின்றது
4) மற்றைய பொருளாதார முறைமைகளை விட நுகர்வோன் முன்னுரிமைக்கு இடமுண்டு.
5) வருமானப் பங்கீட்டில் சமமின்மைகள் அதிகளவில் காணப்படுகின்றன. (திட்டமிட்ட பொருளாதாரங்களை விட)


05) குறிப்பிட்டதொரு பண்டம் ஒரு பருவத்தில் ரூபா 10 படி 100 அலகுகள் விற்கப்பட்டது. அடுத்த பருவத்தில் ரூபா 12 படி 120 அலகுகள் விற்கப்பட்டன. இந்த மாற்றம் விபரிப்பது
1)நுகர்வோரது வருமானத்தில் வீழ்ச்சி
2) பதிலீட்டுப் பொருளின் விலையில் வீழ்ச்சி
3) பதிலீட்டுப் பொருளின் விலையில் அதிகரிப்பு
4) நிரம்பல் பொருளின் விலையில் அதிகரிப்பு
5) உற்பத்தித்திறன் அதிகரிப்பு

06) பின்வரும் ஒரு அட்டவணை ஒரு பண்டத்துக்கான கேள்வி நிரம்பலைக் காட்டுகின்றது.

| விலை | கேள்வித் தொகை | நிரம்பல் தொகை |
|---|---|---|
| 16 | 1000 | 1800 |
| 14 | 1200 | 1600 |
| 12 | 1400 | 1400 |
| 10 | 1600 | 1200 |
| 08 | 1800 | 1000 |

அரசாங்கம் அலகொன்றின் மீது ரூபா 2 விற்பனை வரியை விதித்தால் புதிய சமநிலைவிலை என்னவாக இதுக்கும்?
1) ரூபா 14 2) ரூபா 13 3) ரூபா 12 4) ரூபா 11 5)ரூபா 10

07) அரசாங்கம் குறைந்தபட்சவிலையை அமுல்படுத்துகின்றது.அரசாங்கம் குறைந்தபட்ச விலையாக $P_1$ ஐ நிர்ணயித்தால் தேறிய சமூக விளைவு என்னவாக இருக்கும்?




1.AB-CE 2.ABCHI 3.BCDHIJ - BCDHI
4.ABCEFH -JIG 5.CEFH - EF

08) X பண்டத்தின் வலைசார் கேள்வி நெகிழ்ச்சி -0.2 ஆகும். விலை சார் நிரம்பல் நெகிழ்ச்சி 2.2 ஆகும். அரசாங்கம் இப் பண்டத்தின் அலகொன்றுக்கு ரூபா 50 மானியமாக வழங்குகின்றது. மிகவும் சரியான கூற்றைத் தெரிவு செய்க.
1.நுகர்வோர் குறைந்த மானிய நன்மையையே அனுபவிக்க முடியும்
2.உற்பத்தியாளர் அதிகளவிலான மானிய நன்மையை அனுபவிப்பர்
3.இப்பண்டத்தின் மீதான நுகர்வோன் செலவு அதிகரிக்கும்.
4.இப் பண்டத்திலிருந்தான உற்பத்தியாளர் வருமானம் அதிகரிக்கும்
5.மானியத்தில் பெரும்பகுதி நன்மையை நுகர்வோர் அனுபவிப்பர்

09) X பண்டத்தின் விலை 10 சதவீதத்தினால் அதிகரிக்க அதனது நிரம்பற் தொகை 5 சதவிதத்தினால் அதிகரித்தது. இத் தகவல்களில் இருந்து பெறக்கூடிய மிகவும் திருத்தமான விடையைத் தெரிவு செய்க.
1.இப் பண்டத்தின் விலைசார் நிரம்பல் நெகிழ்ச்சி -0.5.
2.இப் பண்டத்தின் மீது அரசாங்கம் வரிவிதித்தால் பெரும்பகுதி வரிச்சுமையை நுகர்வோர் தாங்குவர்
3.இப் பண்டத்திற்கு அரசாங்கம் உற்பத்தி மானியம் வழங்கினால் பெரும் பகுதி நன்மையை நுகர்வோர் அனுபவிப்பர்
4.நிரம்பற்கோடு எதிர்கணிய சரிவைக் கொண்டுள்ளது.
5.நிரம்பல் கோடு நேர்கணிய சரிவைக்கொண்டது.

10) எது நிரம்பலைத் தீர்மானிக்கும் காரணியல்ல?
1) உற்பத்திக்காரணிகள் இலகுவாக அசையும் தன்மையுடையவை
2) நேரம் கவனத்திலெடுக்கப்படுகின்றது
3) உற்பத்தி அளவில் பாவனை 4) இருப்புகள்
5) இப்பண்டம் அத்தியாவசியமாகவோ இல்லாமலோ இருக்கலாம்

11) அரச தலையீடு இல்லாத மூடிய பொருளாதாரமொன்றின் பெருக்கி 3 ஆகும். முதலீடு 100 மில்லியனால் அதிகரித்தால் நுகர்வுச் செலவு எவ்வளவால் மாற்றமடையும்.
1)ரூபா 900 மில்லியன் 2)ரூபா 600 மில்லியன் 3)ரூபா500 மில்லியன் 4)ரூபா 1000 மில்லியன் 5)ரூபா 300 மில்லியன்

12) தேிய செலவிடத்தக்க வருமானம் எவ்வாறு கணிக்கப்படுகின்றது.
1) மொத்த உள்நாட்டுச் செலவுடன் பொருட்கள் சேவைகள் நிலுவையைக கூட்டுவதன் மூலம்
2) மொத்த உள்நாட்டுச் செலவுக்கு தேறிய வெளிநாட்டுக் காரணி வருமானத்தையும், தேறிய ஏற்றுமதிகளையும் கூட்டுவதன் மூலம்
3)மொத்த உள்நாட்டுச் செலவுக்கு சென்மதி நிலுவையின் தேறியநடப்பு மாற்றுக்களைக் கூட்டுவதன் மூலம்
4)மொத்த உள்நாட்டுச் செலவுக்கு சென்மதிநிலுவையின் நடைமுறைக் கணக்கு மீதியைக் கூட்டுவதன் மூலம்
5)மொத்த உள்நாட்டுச் செலவுக்கு சென்மதி நிலுவையைக் கூட்டி நடைமுறைக் கணக்கு மீதியை கழிக்க வேண்டும்

13) 2007 ஆம் ஆண்டு கற்பனையான பொருளாதாரமொன்றின் தகவல்கள் வருமாறு

| | |
|---|---|
| மொத்த உள்நாட்டுச் செலவு | 10000 |
| தேறிய ஏற்றுமதிகள் | 1500 |
| தேறிய ஏற்றமதிகள் | 500 |
| மொத்த ஏற்றுமதி | 25000 |
| தேசிய உற்பத்திச் சுருக்கி (2000=100) | 120 |
| வர்த்தகமாற்று விகிதம் (2000=100) | 110 |
| மொத்த தேசிய உற்பத்தி 2006 இல் நிலையான விலையில் | 8000 |

2007 ஆண்டுக்கான மெய் தேசிய வருமானம் யாது?
1) 12500 2) 14500 3) 2000 4) 11500 5) 4000

14) பிழையான கூற்று எது?

1)மொத்த தேசிய உற்பத்தி மாறா விலையில் $= \frac{\text{மொத்த தேசிய உற்பத்தி நடுத்தர விலை}}{\text{தேசிய உற்பத்திச் சுருக்கி}} \times 100$

2) தேசிய உற்பத்திச் சுருக்கி$= \frac{\text{மொத்த தேசிய உற்பத்தி நடுத்தர விலை}}{\text{மொத்த தேசிய உற்பத்தி மாறாவிலை}} \times 100$

3) திறந்த பொருளாதாரத்தில் பெருக்கி $\frac{1}{MPS+MPT+NX}$

4) மொத்த தேசிய உற்பத்தி = மொத்த உள்நாட்டுச் செலவு + சென்மதி நிலுவை நடைமுறைக் கணக்கு-நடப்பு மாற்றுக்கள்
5. மொத்த உள்நாட்டு உற்பத்தி $=C+I+G+(X-M)$

15.அரசாங்க இறைக் கொள்கையின் பிரதான கருவிகள்
1.பணநிரம்பல்,அரசாங்க வருமானம் ,அரச்சாங்கக்கடன்
2.அரச வருமானம், அரச செலவு,வட்டி வீதம்
3.அரச செலவு, கடன் நிரம்பல், பண நிரம்பல்
4.அரசாங்கக் கடன், அரசாங்க வருமானம், அரசாங்க செலவு
5.பண நிரம்பல், கடன் நிரம்பல், வட்டி வீதம்.

16. அரசாங்க வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையை நிதியிடும் பணவீக்க மூலகம்.
 1.வெளிநாட்டு நன்கொடைகள்
 2.வெளிநாட்டுக்கடன்
 3.உள் நாட்டு சந்தையல்லாக் கடன்
 4.நிர்வாகக் கடன்
 5.மேற்கூறிய எவையுமில்லை.

17. 2007ஆம் ஆண்டு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வீதமாக அரசாங்க வருமானம்.
 1.10 % 2.12.5 % 3.14.2 % 4.15 % 5.20.5%

18.2007ஆம் ஆண்டு மொத்த உள் நாட்டு உற்பத்தியின் வீதமான அரசாங்க வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை.
 1.5.0 % 2.7.7 % 3.9.5 % 4.10 % 5.25%

19.லோறன்ஸ் வளையி வெளிப்படுத்துவது
 1.அரசாங்க வருமானத்திற்கும் அரசாங்க கடன் நடத்தைக்குடையிலான தொடர்பு
 2.தனியாள் வருமானத்திற்கும் வறுமைக்குமிடையிலான தொடர்பு
 3.வரி வீதத்திற்கும் வரி வருமானத்திற்குமிடையிலான தொடர்பு
 4.வீட்டுத்துறைக்கும் வருமானப் பங்கீட்டுக்குமிடையிலான தொடர்பு
 5.வரித்தளத்திற்கும் வரி வீதத்திற்குமிடையிலான தொடர்பு

20. 2007ஆம் ஆண்டு அரசாங்க நடைமுறைச் செலவு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வீதமாக
 1.10 % 2.12 % 3.15.5 % 4.17.4 % 5.20.%


## பொருளியல் -I (பகுதி-II ) 2மணித்தியாலம்
## Economics-I(part-II) 2 Hour

"அ" பிரிவிலிருந்தும் "ஆ"பிரிவிலிருந்தும் தலா 02 வினாக்களைத் தெரிவுசெய்து எல்லாமாக நான்கு வினாக்களுக்கு விடை தருக.

### உபபிரிவு 'அ'

01)1.எல்லா நாடுகளும் ஒரே மாதிரியான அடிப்படை பொருளியல் பிரச்சினைகளை எதிர்நோக்கிய போதும் ஏன் வேறுபட்ட பொருளாதார முறைமைகள் காணப்படுகின்றன?
 2.சந்தைப் பொருளாதார முறைமை அடிப்படைப்பிரச்சினைகளைத் தீர்ப்பதில் உத்தமானதல்ல விவாதிக்குக?
 3.முதலாளித்துவப் பொருளாதார அமைப்பிலே அரசாங்கம் எவ்வாறு தலையிடுகின்றது?
 4.திட்டமிட்டபொருளாதாரத்திலும் கலப்பு பொருளாதாரத்திலும் பொருளாதார நடவடிக்கைகளில் அரசாங்கம் தலையிடுகின்றது. ஆகவே இரு முறைமைகளும் ஒத்ததன்மையுடையனவா? விளக்குக.

02)1.பின்வருவனவற்றை உற்பத்திச் சாத்திய வளைகோட்டில்காட்டுக.
 அ.ஒரு பொருளை உற்பத்தி செய்வதில் தொழில்நுட்ப முன்னேற்றம் ஏற்பட்டதால் அப்பொருள் உற்பத்தி அதிகரிக்கின்றது.
 ஆ.வர்த்தகத்தில் சாதகமான வெளிநாட்டு வர்த்தகப் பரிவர்த்தனை விகிதம் (நேரான உற்பத்தி சாத்திய வளையி)
 2.ஒரு பண்டத்துக்கான சந்தைச் சமநிலை உற்பத்திச் சாத்திய வளைகோடு என்பவற்றுக்கிடையிலான தொடர்பினை விளக்குக.
 3.பின்வரும் உற்பத்தி சாத்திய வளைகோடு ஒரு பொருளாதாரதரத்திற்குரியதாகும். A என்ற புள்ளியில் பொருளாதாரம் உற்பத்தியை நிகழ்த்துவதாகக் கருதுக. X பண்டத்தில் நேர்கணிய வெளிவாரி விளைவும் Y பண்டத்தில் எதிர் கணிய வெளிவாரி விளைவும் இடம்பெற்றால் அரசாங்கம் இவ் விடயத்திற்காக தலையிடுகின்றது. உற்பத்தி புள்ளி எப்படி மாறும்?




03)1.கடந்த தசாபதத்தில் "பஜாஜ்" மோட்டார் சைக்கிள்களுக்கான கேள்வி அதிகரித்தது. மோட்டார் சைக்கிள்களுக்கான விலையும் அதிகரித்தது. இது கேள்வி விதிக்கான நிபந்தனையா? உமது விடையினை விளக்குக.
 2.நிரமபற் தொழிற்பாடு Qs=20+2p என்க. விலை ரூபா 2 எனக் காணபடுகையில் விலைசார் நிரம்பல் நெகிழ்ச்சிக் குணகம் என்ன?
 3.மேற்குறித்த பண்டத்துக்கான கேள்வித் தொழிற்பாடு Qd=100-2p என்க. அரசாங்கம் அலகொன்றுக்கு ரூபா 5 ஐவரியாக விதிக்கின்றது. எனக் கருதுக.
 அ.உற்பத்தியாளர் மீதும் நுகர்வோர் மீதும் ஏற்பட்ட வரிச்சுமையை மதிப்பிடுக.
 ஆ.அரசாங்கத்தின் வரிவருமானம் யாது?
 4.அரசாங்கம் உற்பத்திப் பொருளொன்றின் மீது வரிவிதிக்கின்ற பொழுது விதிக்கப்பட்ட முழு வரித் தொகையையும் நுகர்வோர் மீது சுமத்தப்படும் சந்தர்ப்பத்தை வரைபட ரீதியாகக் காட்டுக.
 5.நிரம்பல் சமன்பாடு Qs=20 2p
 கேள்விச் சமன்பாடு p=50-1/2 Qd
 சமநிலை வில்லமையும் தொகையையும் மதிப்பிடுக.

04)கற்பனையான சந்தையொன்றில் ஒரு பண்டத்துக்கான கேள்வி நிரம்பற் சமன்பாடு வருமாறு, கேள்விச் நிரம்பற் சமன்பாடுகள் வருமாறு,
 கேள்வி சமன்பாடு Qd=120 -2p
 நிரம்பற் சமன்பாடு Qs=20+2p

1.மேற்குறித்த தகவல்களுக்குரிய கேள்வி, நிரம்பற் கோடுகளை வரைந்து சமநிலை விலை தொகையினை மதிப்பிடுக.
2.இப்பண்டம் அலகொன்று ரூபா 15 விலையில் இறக்குமதி செய்யப்படுகின்றது. இறக்குமதியின் மீது அரசாங்கம் 20 சதவீத வரியை விதிக்கின்றது. பின்வருவ னவற்றைக் கணிப்பிடுக.
 அ.தீர்வைக்கு முன் இறக்குமதித் தொகை
 ஆ.தீர்வைக்குப் பின் இறக்குமதித் தொகை
 இ.அரசாங்கத்தின் வரிவருமானம்
3.அரசாங்கம் குறைந்தபட்ச விலையாக அலகொன்றுக்கு ரூபா 30 ஐ நிர்ணயிப் பதுடன் மிகை நிரம்பலை அரசாங்கம் கொள்வனவு செய்கின்றது.
 அ.அரசாங்கத்தின் கொள்வனவுத் திட்டச் செலவின்ன மதிப்பிடுக.
 ஆ.சமூக விளைவின் தேறிய பெறுமதியை மதிப்பிடுக.
4.அரசாங்கம் கொள்வனவு செய்வதற்குப் பதிலாக உற்பத்தியாளருக்கு ஏற படும் நட்டத்தை மானியமாக வழங்கினால் சமூக விளைவு எப்படி இருக்கும்.

### உபபிரிவு "ஆ"

05)1.பொருளாதாரம் ஒன்று சம்பந்தமான தேசிய வருமானக் கணக்கீட்டுத் தகவல் உமக்குத் தரப்படுகின்றன.

(மில்லியன் ரூபாய்களில்)

| | | |
|---|---|---|
| விவசாயத்துறையில் கூட்டியு பெறுமதி | - | 50 |
| தனியார் நுகர்வுச் செலவு | - | 350 |
| அரசாங்க நுகர்வுச் செலவு | - | 100 |
| மொத்த முதலீடு | - | 150 |
| இருப்புகளில் மாற்றம் | - | 50 |
| கைத்தொழிற்துறையில் கூட்டிய பெறுமதி | - | 150 |
| சேவைகள் துறையில் கூட்டிய பெறுமதி | - | 200 |
| ஊழியர்களுக்கான நட்டஈடு | - | 150 |
| தேறிய வெளிநாட்டுக் காரணி வருமானம் | - | -5 |
| தேறிய வட்டி | - | 80 |
| தேறிய நேரில் வரிகள் | | -25 |
| ஏற்றுமதிகள் | - | 50 |
| இறக்குமதிகள் | - | 200 |
| இலாபங்கள் | - | 100 |
| வாடகை | - | 80 |
| வீட்டுத்துறைக்கான மாற்றுக்கொடுப்பனவுகள் | - | 05 |
| தனியார் வருமான வரிகள் | - | 20 |
| தேறிய வெளிநாட்டு நடப்புமாற்றுகள் | - | 10 |

பின்வருவனவற்றைக் கணிப்பிடுக.
 அ.மொத்த உள் நாட்டு உற்பத்தி
 ஆ.மொத்த உள் நாட்டு உற்பத்தி மீதான செலவு
 இ.பெறுமானத் தேய்வு
 ஈ.சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்கு நிலுவை.

2.ஒரு நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியும் மொத்த உள்நாட்டு செலவும் சமனாக இருக்கும். இக்கூற்றினை ஏற்பீரா? விளக்குக.

06) பொருளாதாரமொன்றின் பேரினப் பொருளாதார மாறிகள் பின்வருமாறு தரப்படுகின்றது.
 (மில்லியன் ரூபாவில்)
 C=400+0.75 Yd
 I=400
 G=275
 T=100+0.2Y

1) சமநிலைத் தேசிய வருமானத்தை மதிப்பிடுக.
2) உட்பாய்ச்சல், வெளிப்பாய்ச்சல் தொழிற்பாட்டைக் காண்க.
3) சமநிலையில் பின்வருவனவற்றை மதிப்பிடுக.
 அ) அரசாங்கத்தின் வரிவருமானம்
 ஆ) செலவிடத்தக்க தேசிய வருமானம்
 இ) தனியார் நுகர்வு
4) செலவுப் பெருக்கி எவ்வளவு? உமது விடையை விளக்குக.
5) அரசாங்கம் தனது செலவை 100 மில்லியன் ரூபாவால் அதிகரிக்குமாயின்
 அ) புதிய சமநிலைத் தேசிய வருமானம் என்னவாகும்?
 ஆ) அரசாங்க செலவின் காரணமாக முதல் நான்கு பெருக்கி விளைவுகளைக் காட்டுக.

07) ஒரு நாட்டின் பொது நிதி சம்பந்தமான தகவல்கள் வருமாறு,
 (மில்லியன் ரூபாவில்)

| | | |
|---|---|---|
| தேறிய கடன் வழங்கல் | - | 1000 |
| வங்கியல்லாத உள்நாட்டு சந்தைக்கடன்கள் | - | 2250 |
| வெளிநாட்டுக் கடன்கள் | - | 2000 |
| வெளிநாட்டுக் கொடைகள் | - | 500 |
| வரியல்லா வருமானம் | - | 4000 |
| மெய்ச் சொத்துக்களின் கையேற்பு | - | 3000 |
| நேர் வரி வருமானம் | - | 2000 |
| வட்டிக் கொடுப்பனவு | - | 3500 |
| நடப்பு மாற்றக் கொடுப்பனவ | - | 2000 |
| அரச ஊழியர்களுக்கான சம்பளங்கள் | - | 9000 |
| மூலதன மாற்றங்கள் | - | 500 |
| நேரில் வரிவருமானம் | - | 8000 |

பின்வருவனவற்றைக் கணிப்பிடுக.

1) அரசாங்க சேமிப்ப
2) முழு மொத்த வரவு செலவத்திட்ட மீதி
3) நிதியீட்டம் செய்யப்படாத வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை
4) விரிவுத் தாக்கம்
5) மூலதனச் செலவுக்கு நிதியிடப்பட்ட முறை

08) 1) இறைக் கொள்கை என்றால் என்ன?
 2) சமத்துவத்தை மேம்படுத்த அரசாங்கம் எவ்வாறு இறைக்கொள்கையைப் பயன்படுத்தலாம்?
 3) வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறையின் அளவு முக்கியமானதல்ல. அதனை நிதிப்படுத்தும் முறையே முக்கியத்துவம் வாய்ந்ததாகும். விவரிக்க?
 4) அரசாங்கம் வரவுசெலவுத் திட்டத்தினூடாக சேமிப்புக்களை எற்படுத்துவதன் பொருளாதார முக்கியத்துவம் என்ன?

(தொடரும்)

# 'ஜி 8' உச்சிமாநாடு இத்தாலியில் ஆரம்பம்

உலகின் அதிகாரத்துவம் பொருந்திய நாடுகளின் தலைவர்கள் கலந்துகொள்ளும் ஜி 8 உச்சி மாநாடு நேற்று முன்தினம் புதன்கிழமை இத்தாலியில் உள்ள



லாகுயிலான் நகரில் ஆரம்பமானது.

கடந்த ஏப்ரல் மாதம் மேற்படி நகரில் இடம்பெற்ற பூமி அதிர்ச்சியில் சுமார் 300 பேர் பலியானமை குறிப்பிடத்தக்கது.

உச்சி மாநாட்டை ஒட்டி நகரின் பாதுகாப்பு என்றுமில்லாதவாறு பலப்படுத்தப்பட்டிருந்தது. ஜி 9 உச்சி மாநாட்டிற்கு எதிர்ப்புத் தெரி வித்து ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்ட சுமார் 36 ஆர்ப்பாட்டக்காரர்களை ஏற்கனவே கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பிரித்தானியா, கனடா, பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, ஜப்பான், ரஷிய மற்றும் அமெரிக்க ஆகிய 8 நாடுகள் ஜி 8 அமைப்பில் அங்கத்துவம் வகிக்கின்றன.

இந்த 3 நாள் மாநாட்டின் முதல் நாளான புதன்கிழமை உலக பொருளாதார நெருக்கடி குறித்தும் நேற்று வியாழக்கிழமை கால நிலை மாற்றம் தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

இந்த பேச்சுவார்த்தைகளில் மேற்படி அமைப்பில் அங்கத்துவம் வகிக்காத பிரேசில், சீனா, இந்தியா, மெக்சிக்கோ, தென்னாபிரிக்க மற்றும் எகிப்து ஆகிய நாடுகளும் இணைந்து கொள்கின்றன.

இன்று வெள்ளிக்கிழமை சர்வதேச அபிவிருத்தி என்ற தலைப்பில் பேச்சுவார்த்தைகள் இடம்பெறவுள்ளன. ஆபிரிக்கத் தலைவர்கள் சமூகமளிக்கும் இந்த நிகழ்வில் ஆபிரிக்காவிலான நெருக்கடிகள் உணவு பாதுகாப்பு போன்ற விடயங்கள் குறித்து கவனம் செலுத்தப்




படவுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, ரஷிய ஜனாதிபதி டிமிட்ரி மேட்வடோவ் சகிதம் இம் மாநாட்டில் கலந்துகொள்கின்றார்.

ஜி 8 உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்கு முன்னர் ரஷியாவிற்கு விஜயம் செய்த ஒபாமா அணு ஆயுத குறைப்பு தொடர்பில் ரஷ்ய தலைவர்களுடன் இணைக்கப்பாடு ஒன்றை எட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6)

# இந்தோனேசிய ஜனாதிபதி தேர்தலில் சுஸிலோ பம்பாங் யுகோயொனோ மீள வெற்றி

(ஜகார்த்தா)

இந்தோனேஷியாவின் ஜனாதிபதி தேர்தல் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்றது.

ஆரம்ப கட்ட வாக்கெடுப்புகளின் பிரகாரம் ஜனாதிபதி சுஸிலோ பம்பாங் யுகோயொனோ வெற்றி பெறுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இரண்டாம் கட்ட ஜனாதிபதி தேர்தலை தவிர்ப்பதற்கு தேவையான 50 சதவீத வாக்குகளை வென்றெடுத்துள்ளதாக உத்தியோகபூர்வமற்ற வாக்கெடுப்பு முடிபுகள் தெரிவிக்கின்றன.

மேற்படி முடிபுகளின் பிரகாரம் இத் தேர்தலில் போட்டியிட்ட முன்னாள் ஜனாதிபதியான மெகாவதி சுகர்னோபுட்றி 27 சதவீதவாக் குக



ளையும் உப ஜனாதிபதி யூஸுப் கல்லா 15 வாக்குகளையும் பெற்றுள்ளனர். நாடளாவிய ரீதியில் வாக்கெடுப்புமிகவும் அமைதியான முறையில் நடைபெற்றதாக கூறப்படுகிறது.

இத்தேர்தலில் வாக்களிக்க 170 மில்லியன் மக்கள் தகுதி பெற்றிருந்தனர். 1998ஆம் ஆண்டு சுஹார்ட்டோவின் கொடுங்கோல் ஆட்சி வீழ்ச்சியடைந்த பின் இந்தோனேசியா எதிர்கொண்ட இரண்டாவது ஜனாதிபதித் தேர்தல் இதுவாகும்.

இந்த தேர்தலின் உத்தியோகபூர்வ முடிபுகள் வெளியாக பல நாட்கள் செல்லலாம் எனதெரிவிக்கப்படுகிறது. (6)

# ஈராக்கில் கார்க்குண்டுத்தாக்குதல்

## 9 பேர்பலி ; 20 க்கும் மேற்பட்டோர் காயம்

(பாக்தாத்)

ஈராக் நாட்டில் சதாம் உசேன் தூக் கில் போடப்பட்ட பிறகு சன்னி ஷியா இன முஸ்லிம்களிடையே மோதல் நீடித்து வருகிறது.

ஒருவர் மீது ஒருவர் கார் குண்டு தாக்குதல்களை நடத்துகிறார்கள்.

ஈராக் நாட்டின் வடக்குப் பகுதியில் உள்ள மொசுல் நகரில் ஷியா முஸ்லிம்கள் அதிக அளவில் வசித்து வருகிறார்கள். அங்கு நேற்று இருவேறு இடங்களில் இடம் பெற்ற இருவேறு கார்க் குண்டுத் தாக்குதல் சம்பவங்களில் 9 பேர் கொல் லப்பட்டனர். 20க்கும் மேற்பட்டவர்கள் படுகாயம் அடைந் தனர். அவர்களில் பலரது நிலைமை கவலைக் கிடமாக வுள்ளது.

ஈராக்கின் முக்கிய பகுதிகளில் இருந்து அமெரிக்க இராணுவம் வாபஸ் பெற்று வருகிறது.

அத் தகைய இடங்களில் தற்கொலை தாக்குதல் நடப்பது அதிகரித்துள்ளது.

மொசுல் நகரில் இருந்து அமெரிக்க இராணுவம் வாபஸ் பெறப்பட்டதால் அங்கு கார் குண்டு வெடிப்புகள் அதிகரித்து வருகின்றன. (6)

# முக்கிய அதிகாரங்களைக் கைவிட பாகிஸ்தான் அதிபர் சர்தாரி முடிவு

பாகிஸ்தானில் ஜனநாயகம் முழுமை பெறவும் வலுப்படவும் அதிபர் பதவிக்குள்ள சில முக்கிய அதிகாரங்களைக் கைவிட ஆசிஃப் அலி சர்தாரி ஒப்புக் கொண்டிருக்கிறார் என்று லண்டனிலிருந்து வெளியாகும் தி டெய்லி கிராப் நாளிதழ் தெரிவிக்கிறது.

இராணுவத்தின் முப்படைத் தளபதிகளை நியமிப்பது, நாடாளு மன்றத்தைக் கலைப்பது, மாநில அரசுகளைக் கலைப்பது ,மாநில கவர்னர்களை நியமிப்பது போன்ற முக்கிய அதிகாரங்களைக் கைவிட சர்தாரி முன் வந்திருக்கிறார் என்று அதிபருக்கு நெருக்கமான வட்டாரங் களை மேற்கோள் காட்டி தி டெய்லி டெலிகிராப் செய்தி வெளியிட்டிருக் கிறது.

அதிபருக்கு அளிக்கப்பட்டுள்ள வரம்பில்லா அதிகாரங்கைளக் கட்டுப்படுத்துவது குறித்தும் பிரதமர் தலைமையிலான அமைச்சரவைக்கு பிரிட்டனிலும் இந்தியாவிலும் தரப்பட்டதுபோன்ற அதிகாரங்கள் பாகிஸ்தான் அமைச்சரவைக்கும் தரப்படவும் உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

பிரதமர் யூசுப் ரஸகிலாணி நடத்திய நீண்டஆலோசனையின் விளைவாக முக்கிய அதிகாரங்களை விட்டுத் தர சர்தாரி முன்வந்துள்ளதாகவும் கூறப்படுகிறது. பாகிஸ்தானில் பெயரளவில் ஜனநாயகம் இருந்தாலும் அங்கு இராணுவம் தான் வலிமை வாய்ந்தது. இராணுவத்தின் தலைமை தளபதி எப்போது வேண்டுமானாலும் ஆட்சியைப்பறித்துக்கொள்வார் என்ற அச்சத்து டன்னேயே ஆட்சியாளர்கள் நாற்காலியில் உட்காந்திருப்பது வழக்கம். பதவி போனாலும் பரவாயில்லை நம்முடைய உயிரையும் சேர்த்து பறித்து விடக்கூடாது என்பதே அவர்களுடைய கவலையாக இருக்கும்.



இந்த நிலைமையை விரும்பாத மக்கள் இராணுவ ஆட்சிக்கு எதிராகக் கிளர்ச்சி நடத்தினர். அதன் விளைவாக இப்போது ஜனநாயக ஆட்சிக்கு இராணுவமே சிறிதளவு உதவிகளைச்செய்ய ஆரம்பிக்கிறது. 1973க்கும் முன்னதாக பாகிஸ் தானில் நிலவி வந்த அரசியல் சட்டத்தை மீண்டும் உயிர்ப்பிக்க சர்தாரி விரும்புகிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (6)


"பிச்சை எடுத்தும் கற்பன கல்"

**யா/ வட்டு இந்து (நவோதய) கல்லூரி**

**சித்தன்கேணி**

**கல்லூரி அபிவிருத்திக்காக நுண்கலை மன்றம் நடத்தும்**

**மாபெரும் கலை விழா**

இடம் : கல்லூரியின் திறந்தவெளியரங்கு.

காலம்: 10.07.2009 வெள்ளிக்கிழமை

பிற்பகல் : 1.30 மணிக்கு

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

வட்டு இந்துக்கல்லூரி
நுண்கலை மன்றம்.

(சி/2769)

**Trinity College And University**

(PART OF THE EDUCATIONAL DIVISION OF THE U.I.C., INCORPORATED IN DOVER, DELAWARE - USA)

யாழ் மற்றும் வடமராட்சி, தென்மராட்சி மாணவர்களது நன்மை கருதி யாழ்ப்பாணத்திலும் எமது பட்டப்படிப்புக்கள் அனைத்தையும் தற்போது ஆரம்பிப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

**Bachelors Degree :-**

- **Bachelor of ICT (B.ICT)** ( Three Years + ICT Training)
- **Bachelor of Business IT (B.B.IT)** (Two Years +Training)
- **Bachelor of Business Management (BBM)** (Two Years +Training)
- **Bachelor of Commerce (B.Com)** (Two Years +Training)
- **Bachelor of International Business (B.IB)** (Two Years +Training)
- **Bachelor of Computer Science - B.Sc (Hons)** (Two Years +ICT Training)

**Masters Degree :-**

- **Master of ICT (MICT)** (1 ½ Years + Project Training)
- **Master of Science (IT) (M.Sc in IT)** (1 ½ Years + Project Training)
- **Master of Commerce (M.Com)** (1 ½ Years + Project Training)

அனுமதி விண்ணப்ப படிவங்களை இன்று முதல் எமது யாழ் நிறுவனத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.



O/L அல்லது A/L பரீட்சையில் சித்தியடைந்த அனைவரும் இப்பட்டப்படிப்பில் இணைந்து கொள்ள முடியும்.

எமது பட்டப்படிப்பை நிறைவு செய்த பின்னர் இலங்கை பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழுவின் அங்கீகாரமுள்ள இந்திய பல்கலைக்கழகங்களில் பட்டப் பின் படிப்பை தொடரமுடியும்

வகுப்புக்கள் யாவும் வார மற்றும் வார இறுதிநாட்களில் நடைபெறும். யாழ்ப்பாணத்தில் முதற் பிரிவு ஆரம்பம் 14/07/09

**Trinity University Affiliations...**

- Part Of The Educational Division Of The U.I.C - USA
- Registered with British (U.K) Education Department (As bonafide legal overseas qualifications by the UK education act of parliament - 1988)
- Registered with Correspondence Accreditation Association (CAA - V140PG330)
- Trinity does have a Accredation certificate JPA(L) 130/10/2-Klt.128. Recognized by UNESCO.
- Member of the United Interdenominationl Church

✓ அனைத்து வருடப் பரீட்சைகள் யாவும் யாழ்ப்பாணத்திலேயே நடைபெறும்.

✓ யாழ்ப்பாணத்தில் இருந்தவாறே எமது பட்டப் படிப்பை நிறைவு செய்தபின்னர் UKயில் உள்ள பல்கலைக்கழகங்களில் பட்டப் பின்படிப்பை (M.Sc,MBA) தொடர முடியும் இதற்கான VISA + PART TIME JOB ஏற்பாடுகள் யாவும் எமது பல்கலைக்கழக நிர்வாகத்தால் செய்து தரப்படும்.



Please Contact Our Degree Course Advisor :-

Rev.Fr.A.B.Vincent Omi

Mobile:- 077 - 9237630

மானிப்பாயில் எமது பட்டப்படிப்பை நீங்கள் கற்பதற்கு நாடவேண்டிய நிறுவனம்

**UNI**

ICT Education Trainers

Jaffna Road, Manipay.

T.P No :- 060 - 221 - 6433 / 0777 - 110862

யாழ்ப்பாணத்தில் எமது பட்டப்படிப்பை நீங்கள் கற்பதற்கு நாடவேண்டிய நிறுவனம்:-

CATWAS.COM

Computer Academy

#26,Somasundram Avenue, Chundikuli,Jaffna.

T.P No :- 021 - 222 - 3805

(C-2764)

# வெகுவிரைவில் விசாரணை முடிபடைந்து எமது பணிகளுக்கு திரும்புவோம்

## பி.பி.சிக்கு அளித்த நேர்காணலில் மருத்துவர் சண்முகராஜா தெரிவிப்பு

(லண்டன்)

போர் நடைபெற்ற காலப்பகுதியில் முல்லைத்தீவு மருத்துவமனையில் பணியாற்றிய மருத்துவர்கள் இடம்பெயர்ந்து வவுனியா சென்றபோது அரசினால் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர். இவர்கள் நேற்று முன்தினம் கொழும்பில் ஊடகவியலாளர்கள் முன் கருத்துத் தெரிவிக்க அழைத்து வரப்பட்டனர்.

இவ் ஊடகவியலாளர் சந்திப்பில் மோதல் காலப்பகுதியில் யுத்த பிரதேசத்தில் தமது பணி தொடர்பாக அவர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

இதேவேளை மோதல்களின் இறுதி நாட்களில் அவர்கள் சந்தித்த பிரச்சினைகள் குறித்து மருத்துவர் சண்முகராஜா பி.பி.சிக்கு நேர்காணல் வழங்கியுள்ளார். அந்நேர்காணலில் அவர் தெரிவித்த கருத்துக்கள் வருமாறு,

நாங்கள் நான்கு மருத்துவர்களும் வைகாசி 15 ஆம் திகதிக்கு பின்னர் பணியாற்ற முடியாமல் போய்விட்டது. அந்நேரத்தில் நாங்கள் படையினருக்கும் அரச அதிபருக்கும் எம்மை மீட்குமாறு அறிவித்தல் கொடுத்தோம்.

வெள்ளைக் கொடியுடன் இருந்த எம்மை படையினர் 15 ஆம் திகதி மாலை 2 மணிக்கு மீட்க வந்தனர். எம்முடன் வைத்தியசாலையில் இருந்த காயமடைந்தவர்களையும் மீட்டுக் கொண்டு வந்தார்கள். அதன்பின்னர் எம்மை விசாரணைக்காக கொண்டு சென்றனர்.

வெகு விரைவில் விசாரணை முடிபடைந்து நாம் வெளியே வருவோம். வன்னியில் நாம் பணியாற்றியது தொடர்பில் எமது சேவையை அரசு பாராட்டியுள்ளது.

**அரசாங்கத்தின் அனுமதியில்லாமல் ஊடகங்களிற்கு பேசியதாகவும் விடுதலைப் புலிகளிற்கு ஆதரவாக பிரச்சார பரப்புரை செய்ததாகவும் உங்கள் மீது அரசு குற்றஞ் சாட்டியது. உங்கள் மீது விசாரணை மேற்கொள்ளப்படுவதாகவும் கூறியது. உங்கள் மீது என்ன குற்றச்சாட்டுக்கள் முன்வைத்துள்ளார்கள்?**

நாங்கள் அரச உத்தியோகத்தர்கள். நாங்கள் ஊடகங்களிற்கு பேட்டி அளிக்க முடியாது. அங்கே இந்த நேரத்தில் (வன்னியில்) அந்த சூழ்நிலையின் பிரகாரம் நாங்கள் சில வற்புறுத்தலிற்கு அமைய சட்டத்தை மீறி ஊடகங்களிற்கு பேட்டி கொடுத்திருந்தோம். அதன் காரணமாக இங்கே எம்மீது விசாரணை மேற்கொண்டு வருகிறார்கள். அவற்றை விட விடுதலைப் புலிகளிற்கு சில சிகிச்சைகளை வழங்கினோம்.

**வற்புறுத்தல் என்று கூறினீர்கள். வற்புறுத்தல் என்றால் என்னமாதிரி? யார் மேற்கொண்டார்கள்?**

ஊடகங்களிற்கு பேட்டி கொடுக்குமாறு விடுதலைப் புலிகள் வற்புறுத்தினார்கள். அதன்படியே நாங்கள் செயற்பட வேண்டிய சூழ்நிலை இருந்தது.

**அந்தச் சமயத்தில் நாங்கள் உங்களைப் பேட்டி கண்டபோது இதே கேள்வியைக் கேட்டோம். நீங்கள் விடுதலைப் புலிகளின் நிர்ப்பந்தத்தில் பேசுகிறீர்களா என்று கேட்ட போது அப்பொழுது நீங்கள் இல்லை என்றல்லவா கூறினீர்கள்?**

அந்த நேரத்தில் நாங்கள் சொல்ல முடியாத ஒரு சூழ்நிலையில் இருந்தோம். அந்த நேரத்தில் அங்குள்ள மக்களிற்கு சிகிச்சை அளித்தல் உள்ளிட்ட பல பிரச்சினைகளிற்கு முகம் கொடுத்தோம். நீங்கள் கூட அங்கிருந்தால் அதைத்தான் செய்திருப்பீர்கள்.

**தற்போது நீங்கள் அரச கட்டுப்பாட்டில் இருக்கிறீர்கள். அரசாங்கத்தின் நிர்ப்பந்தத்தில் நீங்கள் இதைக் கூறவில்லை என்பதற்கு என்ன ஆதாரம்?**

நாங்கள் ஐந்து வைத்தியர்கள் இந்த ஊடக சந்திப்பிற்கு வந்திருந்தோம். இது நாங்களாகவே முன்னின்று தான் இந்த உண்மையான நிலைப்பாட்டை கூற முன்வந்தோம். நாங்கள் உண்மையாக காயமடைந்தவர்களின் விபரங்களைக் கூறியுள்ளோம். உண்மையாக இறந்தவர்கள் விபரங்களைக் கூறியுள்ளோம். எம்மை கூட்டிக் கூறுமாறு கூறினார்கள்.

கடைசி ஒரு மாதமும் 350 இற்கும் 400 இற்கும் இடைப்பட்ட காயமடைந்தவர்கள் வைத்தியசாலைக்கு வந்தார்கள். அந்த தரவுகளை நாங்கள் இங்கு தெரிவித்துள்ளோம்.

**நீங்கள் கடற்கரைப் பகுதியில் இருந்த போது விடுதலைப்புலிகளின் நிர்ப்பந்தத்தால் கூறியதாக நீங்கள் சொன்னீர்கள். இப்பொழுது அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இருந்து கொண்டு இவ்வாறு இதை சொல்கிறீர்கள். எனவே நீங்கள் இப்பொழுது சொல்வதை மட்டும் எப்படி நம்புவது என்ற கேள்வி எழுகிறதல்லவா?**

நீங்கள் கூறுவது விளங்குகிறது. இலங்கை ஒரு ஜனநாயக நாடு. நாங்களாகவே இவ்வாறான ஒரு சந்திப்பிற்கு கூட்டு அனுமதியைப் பெற்றோம். அவர்களாகவே எங்களைக் கேட்கவில்லை.

**உங்கள் குடும்பத்தினரைப் பார்க்க அனுமதி கிடைத்திருக்கிறதா?**

குடும்பத்தினர் எம்மைப் பார்க்கின்றார்கள். வெளிநாட்டிலிருந்து எனது சகோதரியும் வந்து என்னைப் பார்த்துச் சென்றுள்ளார்.

**உங்களை எங்கே தடுப்புக்காவலில் வைத்துள்ளார்கள்?**

கொழும்பு சி.ஐ.டி. அலுவலகத்தில் எமக்கு தனிஅறை, கட்டில் என வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. வெகு விரைவில் நாங்கள் எமது பணிக்கு திரும்புவோம் என எதிர்பார்க்கிறோம்.

**உங்கள் மீது வழக்குப் பதியப்பட்டுள்ளதா? என்ன வழக்கு?**

ஆம். விடுதலைப்புலிகளிற்கு உதவியதாக

**விடுதலைப் புலிகளிற்கு உதவியது என்றால் என்ன உதவி?**

மருந்து வழங்கல், சிகிச்சை, ஊடகத்தில் அவர்களிற்கு ஆதரவாக பேட்டி வழங்கியமை போன்ற உதவி செய்ததாக வழக்குப் பதியப்பட்டுள்ளது. (ச-5)

# யாழ்., வவுனியாவில் சட்டவிரோத ஆயுதக்குழுக்களின் நடமாட்டம் அதிகரிப்பு

## தேர்தல் ஆணையாளரிடம் ஐ.தே.க. முறைப்பாடு

(கொழும்பு)

ஊவா மாகாண சபைத் தேர்தலில் அரச வளங்கள் பயன்படுத்தப்படுவதாகவும் யாழ்ப்பாணம், வவுனியாவில் சட்டவிரோதமான ஆயுதக்குழுக்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளதாகவும் ஐக்கிய தேசியக் கட்சி தேர்தல்கள் ஆணையாளரிடம் முறையிட்டுள்ளது.

யாழ். மாநகர சபைத்தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவும் நடவடிக்கை எடுக்குமாறும் அக்கட்சி ஆணையாளரிடம் கோரியுள்ளது.

ஊவா மாகாண சபைத்தேர்தல், யாழ்ப்பாண மாநகர சபை, வவுனியா நகர் சபைத் தேர்தல்கள் தொடர்பாக நேற்று முன்தினம் புதன்கிழமை ஐ.தே.கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தலைமையிலான குழுவினர் தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திசாநாயக்கவை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியபோது இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

இக்குழுவில் எம்.பி.க்களான டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தன, ரவி கருணாநாயக்க மற்றும் யாழ். மாநகர சபையின் முதன்மை வேட்பாளர் ஏ.ஏ.எஸ் சத்தியேந்திரா ஆகியோர் கலந்து கொண்டனர்.

இச்சந்திப்பின் பின்னர் கருத்துத் தெரிவித்த திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி கூறியதாவது,

யாழ்ப்பாணம் மாநகர சபைத் தேர்த லில் போட்டியிடும் எமது வேட்பாளர்களின் போக்குவரத்து வசதிக்காக விமானப் படை ஹெலிக்கொப்டர்களை அரசாங்கத்திடமிருந்து பெற்றுக்கொடுக்க நடவடிக்கைகளை மேற்கொள் வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்தோம்.

அத்தோடு சட்டவிரோதமான ஆயுதக் குழுக்களின் நடமாட்டங்கள் யாழ்ப்பாணம், வவுனியா பிரதேசங்களில் அதிகரித்துள்ளன. இதனால் வேட்பாளர்கள் தங்களின் சுதந்திரமான பிரசார நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாதுள்ளது. எனவே நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலை நடத்த வேண்டுமென்றால் இவ்வாறான சட்டவிரோத ஆயுதக் குழுக்களின் நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டும் என்றும் தெரிவித்தோம்.

இப்பிரச்சினைகள் தொடர்பில் பாதுகாப்பு அமைச்சின் உரிய அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி பதிலைத் தெரிவிப்பதாக தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்தார் என்றார். (6)

# வழிகாட்டல் கருத்தரங்குகள்

(சாவகச்சேரி)

J.R.S.அனுசரணையுடன் தென்மராட்சி வலய பாடசாலைகளில் கல்வி பயிலும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்குகள் கடந்த 8 ஆம் திகதி ஆரம்பமாகி 11 மத்திய நிலையங்களில் நடைபெற்று வருகின்றன.

இதில் இன்று வெள்ளிக்கிழமை மட்டுவில் கமலாசினி வித்தியாலயம், சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை, உசன் இராமநாதன் கல்லூரி, கச்சாய் அ.த.க. பாடசாலை ஆகிய பாடசாலைகளிலும், இடம்பெயர்ந்த மாணவர்களுக்கான கருத்தரங்குகள் கைதடி முத்துக்குமார சுவாமி மகாவித்தியாலயம், மிருசுவில் றோ.க.த.க. பாடசாலை, இராமாவில் அமைந்துள்ள எழுதுமட்டுவாள் அ.த.க. பாடசாலை, கொடிகாமம் அ.த.க. பாடசாலை ஆகிய பாடசாலைகளிலும் நடைபெறவுள்ளது. (6-29)






*வலிகாமம் கல்வி வலய முறைசாராக் கல்விப் பிரிவினால் முன்னெடுக்கப்பட்டு வரும் பாடசாலை செல்லாத, இடைவிலகிய மாணவர்களுக்கான கல்வி விழிப்புணர் செயற்திட்டம் அண்மையில் சுழிபுரம் ஸ்ரீமுருகன் நலன்புரி நிலையத்தில் நடத்தப்பட்டது.*

*இந்நிகழ்வில் செயற்திட்ட அலுவலர் ந. சண்முகராஜா உரையாற்றுவதையும் கிராம அலுவலர் து. சுபேஷ், காட்டுப்புலம் அ.த.க. பாடசாலை அதிபர் அ. ஸ்ரீஸ்பரலிங்கம், சமூக சேவை அலுவலர் வ. செல்வம், சமுர்த்தி அலுவலர் வ. இராஜகுகன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும், செயலமர்வில் கலந்து கொண்ட பெற்றோர்கள், பிள்ளைகளையும் படங்களில் காணலாம்.*

எல்லா அனுபவங்களுமே கட்டிடங்கள் அல்ல; கட்டிடங்கள் கட்டுவதற்கான அடித்தளம் மட்டுமே.
-ஹென்றி அடம்ஸ்

வலம்புரி

## வருகின்ற வடக்கின் வசந்தம் பண்ணை வீதியை திரும்பிப்பார்க்குமா?

வீதி அமைப்பிற்கும் யாழ். குடாநாட்டிற்கும் எட்டாப் பொருத்தம் போலும். எந்த வீதியும் திருத்தமாக இல்லை.

திருத்திய வீதிகளும் சில காலங்களில் நோய்வாய்ப்பட்டு விடுகின்றன. இதனால் குன்றும் குழியுமான தோற்றத்தையே வீதி எங்கும் காணமுடிகின்றது.

வேண்டுமானால் வீதிகள் தங்களுக்குள் போட்டி போட்டுக் கொண்டு நீயா? நானா? அதிகம் நோய்வாய்ப்பட்டவர் என்று கேட்டுக் கொள்ளலாம்.

அப்படியான ஒரு போட்டி நடக்குமாயின் அதில் அதிக நோய்வாய்ப்பட்ட பெருமையை பண்ணை வீதியே பெற்றுக்கொள்ளும். அந்தளவிற்கு அந்த வீதி கோலம் போய்க்கிடக்கிறது.

யாழ்ப்பாணத்தையும்,தீவகத்தையும் இணைக்கின்ற பண்ணை வீதி நிஷா புயலோடு போசாக்கிழந்து போனது. அதிரடி நடவடிக்கையாக நிஷாவில் பாதிக்கப்பட்ட பகுதிகள் திருத்தப்பட்டன. அந்த திருத்தம் தற்காலிகமானவை.

இப்போது அந்த வீதி முற்றுமுழுதாக சேதமடைந்துள்ளது. நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய மகோற்சவத்துக்குச் சென்ற அடியார்கள் பண்ணை வீதியின் சேதத்தால், பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டனர்.

நிலைமை இதுவாக இருக்கும் போது தீவகத்திற்கான தரைவழிப்பாதையை வேலணை, அராலி ஊடாக அமைக்கும் முயற்சிகள் இடம்பெறுவது வளங்களை விரயம் ஆக்கும் செயல் என்பதுடன் அது பண்ணை வீதியைப் பாழாக்குவதாகவும் அமையும்.

எனவே இப்போது வேலணை-அராலி வீதியை அமைப்பதற்கு எந்த அவசியமும்,அவசரமும் கிடையாது.

முதலில் பண்ணை வீதியை பொறியியலாளர்கள் மற்றும் சிறப்புத் தொழில் நுட்பவியலாளர்களின் துணை கொண்டு திருத்தி அமைக்க வேண்டும்.

அதன் மூலம் தீவக மக்களின் பயணம் சீராக அமைவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுவது அவசியம்.

இது விடயத்தில் அரச அதிகாரிகள் மிகுந்த சிரமத்தை எடுத்து பண்ணை வீதியை பளிங்கு வீதியாக மாற்ற முன்வர வேண்டும். இது இடம்பெயர்ந்த தீவக மக்களை மீளக்குடியமர்த்துவதற்குப் பெருந்துணையாக அமையும்.

பண்ணை வீதியைத் திருத்துவதில் காட்டப்படும் அசமந்தம் பாரிய வீதி விபத்துக்களை ஏற்படுத்தி விடும் என்ற உண்மை உணரப்பட வேண்டும்.

கடந்த காலங்களில் பண்ணை வீதியின் ஒடுக்கமும் கூடவே வீதியின் சேதமும் சேர்ந்து பல விபத்துக்களை ஏற்படுத்தியதும், பலர் இறந்து போனதுமான சம்பவங்களை நினைவிற் கொண்டு விரைவாகப் பண்ணை வீதியை திருத்தி அமைக்கும் நடவடிக்கைகளை முன்னெடுப்பது காலத்தின் கட்டாய தேவையாகும்.

வடக்கின் வசந்தம் பண்ணை வீதியை திரும்பிப்பார்க்குமாயின் எல்லாக்குறையும் நீங்கும்.

# தமிழ் மக்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது என்பதை சிங்கள சமூகம் மனம் திறந்து கூறும் நிலை உருவாக வேண்டும்

## ஐ.தே.க. எம்.பி லக்ஸ்மன் செனவிரட்ன

(கொழும்பு)

சிங்களவர்களால் தமிழ் மக்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது. என்பதை இன்றைய சிங்கள சமூகம் தமிழ் மக்களிடம் சென்று மனம் திறந்து கூறி ஒப்புரவாகும் நிலை உருவாக வேண்டும். அப்போதே எம் மீது தமிழ் மக்கள் நம்பிக்கை கொள்வர் என்று ஐக்கிய தேசியக்கட்சி எம்.பி லக்ஸ்மன் செனவிரட்ன கடந்த செவ்வாய்க்கிழமை சபையில் தெரிவித்தார்.

தேசிய பிரச்சினைக்கு தீர்வு என்பதிலும் 13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பிலும் அரசுக்குள் தெளிவற்ற தன்மையே காணப்படுகின்றது. இது களையப்படுவதுடன் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளில் அரசாங்கமும் பெரும்பான்மை சமூகமும் நேர்மையுடன் நடந்து கொள்ள வேண்டும் என்றும் அவர் சொன்னார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அவசர காலச் சட்டம் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசுகையிலேயே செனவிரட்ண எம்.பி இதனைத் தெரிவித்தார். இங்கு அவர் மேலும் கூறுகையில் யுத்தம் நிறைவடைந்துள்ள நிலையில் தேசியப் பிரச்சினைக்கு எவ்வாறான தீர்வு பெற்றுக்கொடுப்பது என்பது பற்றி சிந்திக்க வேண்டியுள்ளது.

13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் ஒரு தெளிவற்ற தன்மையே அரசிடம் காணப்படுகின்றது. பிரச்சினைகளை தீர்ப்பதற்கு 13ஆவது திருத்தச் சட்டத்திற்கும் அப்பால் செல்வதற்கும் ஜனாதிபதி தயாராக இருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

ஜனாதிபதியின் நிலைப்பாடு இவ்வாறு இருக்கையில் ஜாதிக ஹெல உறுமயவின் சம்பிக்க ரணவக்க 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல் படுத்தினால் அரசிலிருந்து வெளியேறுவோம் என்று கூறுகின்றார்.

பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்டிருக்கின்றது. இந்நிலையில் அப்பாவித் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் . இங்கு இடம்பெயர்ந்தவர்களின் பிரச்சினைகள் பாரியது.

புத்த பெருமான் கூறுவது விலங்குகளைக் கூட அடைத்து வைக்கவேண்டாம் என்றாகும். இப்படியிருக்கையில் முற்கம்பிவேலிகளுக்குள் தமிழ் மக்களை அடைத்து வைத்திருப்பதை அவர்கள் மட்டுமல்ல யாரும் விரும்புவதில்லை.

முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்களில் பயங்கரவாதிகள் இருப்பார்களாக இருந்தால் அவர்களையும் அப்பாவி மக்களையும் இணைத்துப்பார்க்க முடியாது. பயங்கரவாதிகளை பிரித்தெடுக்க வேண்டும். இதில் எமக்குப் பிரச்சினை இல்லை.

ஏனெனில் அந்த மக்கள் தொடர்பில் குரல் கொடுக்க பாராளுமன்ற உறுப்பினர்கள் என்ற மட்டில் எமக்கும் பொறுப்பு இருக்கின்றது.

சிங்கள மக்களால் தமிழ் மக்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது. இன்றைய சிங்கள சமூகம் தாமாக முன் வந்து தமிழ் மக்களிடம் சென்று எமது முன்னோர்கள் உங்களுக்கு தீங்கு இழைத்து விட்டனர் அதற்காக வருந்துகிறோம். என்று கூறுவதற்கு சிங்களவர்கள் முன் வரவேண்டும். அப்போது தான் தமிழ் மக்களும் எம் மீது நம்பிக்கைகொள்வர் . எமது சமூகங்களுக்கிடையிலான பிரச்சினையில் நாம் நேர்மையுடன் நடந்து கொள்ளுதல் அவசியம் . யுத்தம் வெற்றி கொள்ளப்பட்டுள்ள நிலை அரசு நேர்மையாக நடந்து கொள்ள வேண்டும் என்றார். (6)

## இடம்பெயர்ந்து முகாம்களில் வாழ்பவர்களில் 14 ஆயிரம் பேர் வலது குறைந்த நிலையில்

### சமூக சேவை அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கில் இருந்து இடம்பெயர்ந்து முகாம்களில் வாழ்பவர்களில் 14 ஆயிரம் பேர் ஊனமுற்ற நிலையில் அவதியுறுவதாக சமூக சேவைகள் அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. வலது குறைந்த மற்றும் சித்த சுயாதீனமற்ற 14 ஆயிரம் பேர் முகாமகளில் தங்கியிருப்பதாக சமூக சேவைகள் அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

சமூக சேவைகள் அமைச்சினால் அண்மையில் மேற் கொள்ளப்பட்ட ஆய்வுகளின் போது இந்தத் தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. இறுதிக் கட்ட யுத்தங்களின் போது 2 ஆயிரத்து 800 பேர் ஊனமுற்றுள்ளதாகவும் 3 ஆயிரத்து 968 பேர் பிறப்பிலேயேவலது குறைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வலது குறைந்தவர்களுக்கு சக்கர நாற்காலி உள்ளிட்ட நிவாரணப் பொருட்கள் தேவைப்படுவதாக சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர் லயனல் பிரேமசிறி தெரிவித்துள்ளார். (6)

## மொறட்டுவ பல்கலைக்கழகத்தினால்

### தமிழ் ,சிங்கள மொழி மூல கணனி மென்பொருட்கள் அறிமுகம்

(கொழும்பு)

இலங்கை மக்கள் தத்தமது தாய் மொழிகளில் கணனிகளை பயன் படுத்துவதற்கான வாய்ப்பினை மொறட்டுவ பல்கலைக்கழகம் ஏற் படுத்திக் கொடுத்துள்ளது. இந்த திட்டத்திற்கு லகப்ஸ் எனப் பெயரிடப் பட்டுள்ளது.

சுமார் ஒரு தசாப்தத்திற்கு முன் னர் கணனி குறிப்பிட்ட ஒரு சமூ கத்தினர் மாத்திரம் பயன்படுத்தும் கருவியாக இருந்த போதிலும் தற்போது இலங்கையில் பல்வேறு தரப்பினர் மத்தியிலும் பிரபல்யம் அடைந்து காணப் படுகிறது.

கணனிகளை உரிய முறையில் செயற்படுத்த வேண்டுமாயின் ஆங் கில மொழியில் ஓரளவு தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டியது அவசியமாகி றது. தமிழ் , சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் கடமையாற்றுவதன் முக்கியத்துவம் குறித்தும் தற்காலத்தில் அதிகளவில் பேசப்படுகிறது.

தாய்மொழிகளில் இலங்கை மக்கள் கணனிகளை செயற்படுத்து வதே மொறட்டுவ பல்கலைக்கழகத் தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள புதிய திட்டத்தின் நோக்கமாகும்.

இதற்கமைய தமிழ், சிங்களம் மொழிகளை பயன்படுத்தக் கூடிய பல கணனி மென்பொருட்கள் அறி முகப்படுத்தபட்டுள்ளன. அன்றாட கணனிப் பயன்பாட் டிற்கும் இணையத் தளங்களை செயற்படுத்துவதற்குமான சில மென் பொருட்கள் தமிழ், சிங்கள மொழி கள் மூலம் தயாரிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக ஆர்வம் உள் ளவர்களுக்கு அவசியமான தகவல் களை வழங்கி தமிழ் சிங்கள மொழி கள் மூலம் கணனிகளை பயன்ப டுத்துவதற்கான சந்தர்ப்பத்தை ஏற் படுத்த தயாராக உள்ளதாக மொறட் டுவ பல்கலைக்கழகத்தின் கணனி விஞ்ஞான மற்றும் பொறியியல் பீடம் தெரிவிக்கின்றது. (6)

## வெள்ளி நற்சிந்தனை 79

# பக்தியின் மொழி தமிழ்

மகிழ்வான வாழ்க்கையில் இடையே குறுக்கீடுகள் வரும் போது மனிதன் மட்டுமல்ல விலங்குகளும் கலங்கிவிடுகின்றன. ஒருவர் வாழும் சூழலில் பிறர் வந்து நுழைந்தால் இயல்பு வாழ்க்கை பாதிப்படையும். உறவோடு கலந்திருந்த உன்னதமான வாழ்வில் பிரிவு நேர்ந்தால் துன்பந்தான். கணவனும் மனைவியும் வாழ்வுச் சூழலில் பிறர் தலையீடு தோன்றும் போது படுந்துன்ப நிலையைச் சுந்தரர் நன்குணர்ந்தவர். விலங்குகளின் வாழ்வியலிலும் இத்தகைய சோகம் ஏற்படுவதை இயற்கையை உன்னிப்பாய்க் கவனித்துள்ளார்.

மலைச்சாரல் பொழிற்சாரல் என இரு வேறுபட்ட சூழல்களில் விலங்குகள் வாழ்கின்றன. குறிப்பாக ஆண்யானையும் , பெண்யானையும் குடும்பமாக மகிழ்வாக வாழ்வு நடத்துகின்றன. இப்பிரதேசங்களில் வேறு மிருக இனங்கள் வந்து விட்டால் குழப்பந்தான் . முன்னர் அங்கிருந்த பெண்யானை பயந்து ஆண்யானையை அழைக்கும். அவ்வொலியைக் கேட்ட ஆண்யானை பிளிறியபடி ஓடி வரும். பிற விலங்கினங்களிடையே பெண்யானையைக் காணாமல் திகைத்து ஓடும் . மீண்டும் தனது பெண்யானையை தேடித்திரியும். சீபர்ப்பத மலையிலே சுந்தரர் இந்த அன்பான விலங்குக் குடும்பத்தைக் கண்டு வியந்து பாடியுள்ளார்.

வாழ்க்கையில் ஏற்படும் திடீர் நிகழ்வுகள் எம்மைப்பெரும் பாதிப்புக்குள்ளாக்கும். அவ்வேளையில் மிக நிதானமாகச் செயற்படவேண்டும். மலையில் வாழ்கின்ற விலங்கினத்திடையே இத்தகைய பாதிப்பு இருப்பதைச் சுந்தரர் பாடியதற்குத் தனியான காரணமும் உண்டெனலாம். தமது சொந்த வாழ்வில் இருமனைவியரைத் துணையாகக் கொண்டமையால் ஏற்பட்ட சிக்கல்களும் அதனைத் தீர்க்க வந்த இறைவன் அருட்செயலையும் நினைவுபடுத்திப் பார்க்கிறார். ஒருவரைப் பிரிந்து விட்டால் அவரைத் தேடியலையும் துன்பம். அது மிகவும் கடினமானது. பிடியின் அவலக்குரல் கேட்ட களிறு படும் பாடு. பிளிறி அலமந்து வந்து திகைத்து ஓடும் காட்சியைப் பாடலில் சுந்தரர் உணர்வு பூர்வமாகவும் காட்சி ரூபமாகவும் காட்டுகிறார்.


**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

பாதுகாப்பான வாழ்வுச் சூழலிற் கூடத்துன்பம் ஏற்படலாம். அமைதியான வாழ்வு அவலமாகலாம். இது நியதி என்று பலர் கருதலாம். எனினும் பிடியைத் தேடும் களிற்றைப் போல எமக்கும் ஒரு தேடுதல் உணர்வு தேவை. துன்பத்தில் ஆழ்ந்து விட்டவரை அதிலிருந்து மீட்கும் மனப்பக்குவம் தேவை. பக்தி நெறியில் பிறர்துயர்துடைக்கும்பணி பிறவித்துயரை நீக்கி இறையோடு இணைத்து வைக்கும் சுந்தரர் தனது பாடலிற் சொல்லும் வாழ்வியல் எல்லோரையும் "இறையருள் நாடும் பக்தி நெறியிற் செலுத்தி அமைதியாக வாழவைக்கும்"

"மலைச் சாரலும் பொழிற்சாரலும் புறுமே வருமினங்கள்
மலைப்பால் கொணர்ந்திடித்தூட்ட மலங்கித் தனகளிற்றை
அழைத்தோடியும் பிளிறியவை அலமந்து வந்தெய்த்துத்
திகைத்து ஓடித் தன் பிடித்தேடுஞ் சீர்ப்பதமலையே"

# புத்தம்புது வசதிகளுடன் விண்டோஸ் 7

**தகவல் -3**




விண்டோஸ் இயக்கம் வந்த காலம் முதல் நாம் பல்வேறு சாதனங்களைத் தனித்தனி விண்டோவில் ஒரே நேரத்தில் பார்த்து இயக்க முடிந்தது. ஆனால் விண்டோஸ் 7 மூலம் இவை அனைத்தையும் Devices and Printers என்ற விண்டோவின் மூலம் இயக்கலாம்.மேலும் விண்டோஸ் 7 இயக்கத்தில் Device Stage என்னும் இன்னுமொரு புதிய வசதி தரப்பட்டுள்ளது.இதன்மூலம் நம் கணனியுடன் இணைக்கப்பட்டுள்ள எந்த ஒரு சாதனத்தையும் இயக்கலாம்.

இந்தப் புரோகிராமினைத் தங்கள் இயக்கத்தில் வைத்துள்ள ஒரு சாதனத்தை மிக விரைவாகவும் எளிதாகவும் இயக்கலாம். எடுத்துக்காட்டாக டிஜிட்டல் கமரா ஒன்று இதற்கேற்ப புரோகிராம் செய்யப்பட்டிருந்தால் அந்த கமராவினைக் கணனியில் இணைத்தவுடன் டிவைஸ்ட் ஸ்டேஸ் மூலம் அதில் எத்தனை படங்கள் உள்ளன மற்றும் சார்ந்த தகவல்களைக் காணலாம்.

**ஹோம் குருப்**

இன்றைக்குப் பல வீடுகளில் நாம் வைத்து இயக்கும் கணனிகளில் இன்டர்நெட் இணைப்பைப் பகிர்ந்து பயன்படுத்த ஹோம் நெட்வோர்க்கினை ஏற்படுத்துகிறோம். ஆனால் இதன்மூலம் மற்ற சாதனங்களை இயக்குவது சற்று சிரமமானது.நம்வீட்டில் ஒன்றுக்கு மேற்பட்ட கணனிகள் இருக்கலாம்.ஆனால் பிரிண்டர் ஒன்றுதான் வைத்திருப்போம்.

படுக்கை அறையில் லப்டொப் பயன்படுத்துவோம். அதில் உள்ள ஒரு பைலை பிரிண்ட் எடுக்க பிரிண்டர் வீட்டில் இன்னொரு அறையில் இருக்கலாம். என்ன செய்வோம்? நான் அதனை இமெயில் மூலம் எக்கவுண்ட் ஒன்றுக்கு அனுப்பி பின் அந்த பைலை பிரிண்டருடன் இணைக்கப்பட்டுள்ள கணனி வழியாகப் பெற்று அச்செடுப்போம் அல்லது யு.எஸ்.பி. டிரைவ் ஒன்றைப் பயன்படுத்தி பைலை மாற்றுவோம். ஹோம் குரூப் இந்த தொல்லைகளில் இருந்து நம்மை விடுவிக்கிறது.

விண்டோஸ் 7 பதியப்பட்டு இயக்கப்படும் போதே அந்த கணனி ஹோம் குரூப் இயங்கத் தொடங்குகிறது. பின் வீட்டில் உள்ள மற்ற கணனிகளையும் இதன்மூலம் இயக்கலாம். படங்களை பேர்சனல் கணனி களில் பதித்து பின் ஹோம் குரூப் மூலம் லப்டொப்பில் பெற லாம். இதேபோல் பைலை அச்சிடும் வேலையையும் மேற் கொள்ளலாம்.

மேலும் விண்டோஸ் 7, எந்த நெட்வொர்க்காயினும், அது எப்படிப்பட்ட வகையில் இணைக்கப்பட்டிருந்தாலும் (வயர், வைபி, மொபைல் பிராட்பேண்ட்,டயல் அப், கார்பொரேட் நெட்வெர்க் போன்றவை) கணனிகளுக்குள் பைல் மாற்றத்தை ஒரே கிளிக்கில் தருகிறது. ஏற்கனவே இருந்த பல வசதிகள் மேம் படுத்தப்பட்டு இந்த தொகுப்புடன் தரப்பட்டுள்ளன. விண்டோஸ் கலண்டர் புதுவடிவில் புரோகிராமர் மற்றும் ஸ்டேட்டிக்ஸ் எனத் தரப்பட்டுள்ளது.

கொண்ட்ரோல் பனலில் Clear Text Tuner, Display Calibration Wizard,Gadgets Recover, Trouble Shooting, Workspaces Center, Location and Other Sensors, Crédential Manager,Biometric Devices, System Icons மற்றும் Display ஆகிய வசதிகள் புதியனவாகச் சேர்க்கப்பட்டுள்ளன. Windows Security Centre ஆக இருந்த பிரிவு Windows Action Centre என மாற்றப்பட்டுள்ளது.




விண்டோஸ் 7 வருவதற்கு முன் வந்த சிஸ்டங்களில் இருந்த சில வசதிகள் இதில் இணைக்கப்படவில்லை. அவை விண்டோஸ் கலண்டர், விண்டோஸ் மெயில், விண்டோஸ் மூவி மேக்கர்,விண்டோஸ் போட்டோ கலரி. இவற்றில் சில விண்டோஸ் லைவ் எசன்ஷியல்ஸ் என்ற அடிப்படையில இலவச புரோகிராம்களாகத் தரப்படுகின்றன.

விண்டோஸ் விஸ்டாவில் இருந்து நீக்கப்பட்ட Internet Spades, Internet Backgamm on and Internet Checkers புரோகிராம்கள் இதில் இணைக்கப்பட்டுள்ளன. இன்டர் நெட் எக்ஸ்புளோரர் 8 மற்றும் விண்டோஸ் மீடியா பிளேயர் 12 சேர்க்கப்பட்டுள்ளன. நாம் விரும்பினால் விண்டோஸ் இன்டர்நெட் எக்ஸ்புளோரர் தொகுப்பைச் செயல்பட விடாமல் மாற்றி விடலாம். இந்த வரிசையில் விண்டோஸ் மீடியா பிளேயர், விண் டோஸ் மீடியா சென்டர், விண் டோஸ் சர்ச் மற்றும் விண் டோஸ் கேட்ஜட் பிளாட்பார்ம் ஆகியவை உள்ளன.

(முற்றும்)

# அவிரா இலவச அண்டி வைரஸ்

பலர் தாங்கள் பயன்படுத்தும் இலவச அண்டிவைரஸ் தொகுப்புகள் சரியாக இயங்கவில்லை என்றும் சில நாட்களிலேயே வைரஸ்களை கணனிக்குள் அனுப்பிவிடுகின்றன என குறை கூறுகின்றனர்.




ஒரு சிலர் தானும் தன் நண்பரும் ஒரே நாளில் தங்கள் கணனிகளில் இலவச அண்டி வைரஸ் புரோகிராம் ஒன்றை நிறுவியதாகவும் தன் நண்பரின் கணனியில் அது நன்றாகச் செயல்படுவதாகவும் தன் கணனியில் அது சரியாகச் செயல்படவில்லை என்றும் தெரிவிக்கின்றனர்.

இலவச அண்டி வைரஸ் புரோகிராம்கள் சரியாகத் தான் செயல்படுகின்றன. கட்டணம் செலுத்தி வாங்கும் அதே புரோகிராமின் வேறு பதிப்புக்களில் கூடுதல் வசதிகள் தரப்படும். ஆனால் எந்த அண்டி வைரஸ் புரோகிரமாக இருந்தாலும் அதனை அவ்வப்போது அப்டேட் செய்திட வேண்டும். இல்லைஎன்றால் அதன் செயல்பாடு பின் தங்கி பிரச்சினைகளைத் தரும்.

இந்த சிந்தனைகளுடன் இணையத்தில் சுற்றி வந்த போது அவிரா அண்டி வைரஸ் (Avira's Free antivirus) என்ற புரோகிராம் இலவசமாகவும் கட்டணம் செலுத்தியும் கிடைப்பது தெரிய வந்தது. இதனை டவுண்லோட் செய்து இன்ஸ்டோல் செய்த போது இதன் பல சிறப்பம்சங்கள் தெரிய வந்தன். அதுகுறித்த தகவல்கள் கீழே தரப்படுகின்றன.


இதன் சிறப்புக ளைச் சொல்வதென் றால் வைரஸ்களை இந்த புரோகிராம் அறிந்துகொள்ளும் திறனைச் சொல்லலாம். கணனி சிஸ்டத் தை இது இயங்கும் போது சிரமப்படுத்து வதில்லை. ஷெட்யூல், ஹெல்ப் பைல், ரியல் டைம் ஸ்கேனர் ஆகியனவும் சிறப்பாக இயங்குகின்றன.

இலவசம் மற்றும் கட்டணத் தொகுப்பு இருப்பதால் இலவசத் தொகுப்பு அவ்வளவாகத் திறமையுடன் செயல்படாது என்ற எண்ணம் ஏற்படும் இந்த தொகுப்பு அவ்வாறு இல்லை.

இதன் வைரஸ் கண்டறியும் திறனைச் சோதித்தலில் 99.2 சதவிகித திறனைக் காட்டியது. அட்வேர் புரோகிராம்களைத் தடுப்பதில் 99.6 சதவிகித திறனைக் காட்டியது. இதில் உள்ள ஷெட் யூலர் தரும் ஆப்ஷன்ஸ் வேறு எந்த அண்டி வைரஸ் தொகுப்புகள் தருவதைக் காட்டிலும் கூடுதலாகவே உள்ளது.

அவிரா இயங்குவதற்கு கணனி மெமரியில் 2 எம்பிக்குக் குறைவாகவே எடுத்துக்கொள்வதால் கணனி இயங்குவதில் பிரச்சினை எதுவும் இல்லை. இதனைப் பெற *http://www.freeav.com* என்ற முகவரியில் உள்ள தளத்திற்குச் செல்லவும்.

# டிவிடியை பிரித்து கொப்பி செய்திட உதவும் மென்பொருள்




இன்று பெரும்பாலான ஓடியோ , வீடியோ சமாச்சாரங்கள் டி.வி.டி.யில்தான் கிடைக்கின்றன.

ஆனால், நம்மில் பலர் ஒரு குறிப்பிட்ட பாடல் அல்லது காட்சி தனியே வேண்டும் என விரும்புகிறோம்.

அதனை மட்டும் எப்படி கட் செய்து டிவிடியிலிருந்து கொப்பி செய்வது? ஏன் சில டிவிடிக்கள் முழுமையாக அதனைக் கொப்பி செய்திட முடியாதபடி இருக்கின்றன? பணம் செலுத்தி வாங்கியவரே கூட பக் அப் கொப்பி எடுக்கலாம் என்றால் முடியாது.

இந்த நோக்கங்களுக்காக டிவிடி ரிப் மாஸ்டர் புரோ என்ற மென்பொருள் தயாரிக்கப்பட்டு இலவசமாக இணையத்தில் வழங்கப்படுகிறது.

இந்தப் புரோகிராமினை இயக்கி ஒரு டிவிடியை பல போர்மெட்களில் இயங்கும் படி பிரித்து அமைக்கலாம். இதற்கு உதவிடும் வகையில் திறன் மிக்க மாற்றும் என்ஜின் இந்தப் புரோகிராமில் உள்ளது. டிவிடியிலிருந்து எம்பெக் -1 , எம்பெக் -2 ,எம்பெக்-3 ஏவிஐ மற்றும் ஐபொட் பயன்படுத்தும் போர்மெட்டுகளில் இதனைப் பிரித்து அமைக்கமுடியும்.

இந்த சொப்ட் வெயார் புரோகிராமினை இலவசமாகப்பெற http:/www.techspot.com/downloadget.php என்ற முகவரியில் உள்ளஇணைய தளத்தை அணுகவும்.


# குழாய்நீரில் கீபோர்டைக் கழுவலாம் !

சிறிது தண்ணீர் அல்லது கோப்பி துளிபட்டாலே தாம் தூம் என்று என் அப்பா குதிக்கிறார் இதென்ன குழாய் நீரில் கீ போர்டைக் கழுவலாமா? ரீலா?என்று வியப்புடன் பல மாணவர்கள் இதனைப் படிக்கலாம் . ஆம்உண்மைதான் கிங்ஸ்டன் நிறுவனம் நீரில் கழுவிச் சுத்தம் செய்திடக் கூடிய கணனி யு.எஸ். பி/ பி.எஸ் 2 கீபோர்ட் ஒன்றை விற்பனைக்கு அறி முகப்படுத்தியுள்ளது.




கழுவக் கூடிய வசதி மட்டுமின்றி இது அன்ட்டி மைக்ரோ பியல் ட்ரீட்மெண் ட்டுக்குப் பின் விற்பனை செய்யப்படுவ தால் எந்த பக்டீரியாவும் இதில் இருக்காது. இதனால் நீர்பட்டு பங்கஸ் பிடிப்பது, சிறிய மோல்ட்கள் உருவாவது இல்லை. எனவே மருத்துவமனைகளில் பாதுகாக்கப் பட்ட இடங்களில் இந்த கீபோர்டினைப் பயன்படுத்தலாம்.அதேபோல அரசு அலுவலகங்க்கள், பள்ளிகள் போன்ற கல்வி நிலையங்கள் ஆகியவற்றிலும் பயன்படுத்தலாம். 104கீகளுடன் ஸ்டாண்டாட் கீபோர்டாக இது உள்ளது. தற்போதைக்கு Amazon.com மற்றும் Kensington.com ஆகிய தளங்களின் வழியாகப் பெற்றுக் கொள்ளலாம்.இதன் விலை39.99 டொலர். விரைவில் இலங் கையிலும் இதனை எதிர்பார்க்கலாம்.

# போட்டபிள் ஹார்ட் டிஸ்க் 640 ஜிபி 16 கிராம் எடை



ஹார்ட் டிஸ்க் தயாரிப்பில் உலகப் புகழ் பெற்ற முன்னணி நிறுவனமான ஸீ கேட் நிறுவனம் அண்மையில் 640 ஜிபி கொள்ளளவு கொண்ட கையில் எடுத்துச் சென்று பயன்படுத்தக் கூடிய ஹார்ட் டிஸ்க் ஒன்றை 16 கிராம் எடையில் விற்பனைக்கு வெளியிட்டுள்ளது.

இது Free agent Go என்ற வரிகையில் வந்துள்ளது. இதன் அகலம் உயரம், தடிமன் 80X130X12.5 மிமீ என்ற அளவில் உள்ளது. இதனால் 640 ஜிபி டேட்டாவை ஒருவர் ஜஸ்ட்லைக் தேடுகையில் எடுத்துச் சென்று பயன்படுத்தலாம். யு.எஸ்.பி.2 வகை போர்ட்டில் இதனை இணைக்கலாம். விநாடிக்கு 480 எம்பி டேட்டா தகவல் பரிமா றும் என அறிவிக்கப்பட்டுள்ளது.இது சற்றுக்கூட குறைய இருக்கலாம்.பேக் அப் சாப்ட் வெயர் மற்றம் என்கிரிப்ஷன் வசதி உள்ளது.

இதிலேயே இதற்குத் தேவை யான Free agent சொப்ட் வெயர் பதிந்து தரப்படுகிறது.இது இயங்காத போது மின் சக்தியைப் பயன்படுத்தாது விண்டோஸ் எக்ஸ்பி மற்றும் விஸ்டாவில் இயங்கும் இந்த ஹார்ட் டிஸ்க மேக் மற்றும் லினக்க்ஸ் ஒப்பரேட்டிங் சிஸ்டங்களில் இயங்காது.

சில்வர் மற்றும் கறுப்பு ஆகிய இரு வண்ணங்களில் இது கிடைக்கிறது. இதற்கு ஐந்து ஆண்டுகள் வோரண்டி தரப்பட்டுள்ளது.

# வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



## அமரர் கந்தையா இரத்தினம்

(இரத்தினம் கடை, ஓட்டுமடம் சந்தி)

**தோற்றம்** **மறைவு**

**12.09.1941 10.06.2009**

கடந்த (10.06.2009) புதன்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் கந்தையா இரத்தினம் அவர்களின் வீட்டுக்கிரியை நிகழ்வு இன்று (10.07.2009) வெள்ளிக் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற உள்ளதால் அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகை தந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றோம்.

அத்துடன் எமது தந்தையாரின் மரணச் செய்தி கேட்டு வருகை தந்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

234/10, சென்செபஸ்ரியார்லேன்,
ஒட்டுமடம், யாழ்ப்பாணம்.

தகவல்
குடும்பத்தினர்.

(2935)

## ஜனாதிபதியின் முடிபே...

பேச்சாளரும் தகவல் மற்றும் ஊடகத் துறை அமைச்சருமான அநுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று முற்பகல் நடைபெற்ற அமைச்சரவை முடிபுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னரே நாட்டின் பிரச்சினைக்கு உரிய தீர்வு வழங்கப்படும் என ஹிந்து பத்திரிகைக்கு அண்மையில் ஜனாதிபதி வழங்கிய பேட்டி ஒன்றில் தெரிவித்திருந்தார்.

இக் கூற்று தொடர்பாக அரசாங்கத்தின் கருத்து என்னவென ஊடகவியலாளர் கேட்ட கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர் தொடர்ந்தும் கூறியதாவது,

இந்தியாவிலிருந்து வெளிவரும் ஹிந்து பத்திரிகைக்கு ஜனாதிபதி வழங்கிய பேட்டி அப்பத்திரிகையில் மிகவும் அழகாகப் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

எமது நாட்டிலுள்ள பத்திரிகைகளை விடவும் ஹிந்து பத்திரிகை மிகவும் தரமான பத்திரிகையாகும் என்றும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (ச-5)

## கிழக்கு மாகாணத்தி...

பாதிக்கப்படாது என்று கொழும்பிலுள்ள செஞ்சிலுவைச் சங்கப் பேச்சாளர் ஒருவர் பி.பி.சிக்குத் தெரிவித்துள்ளார்.

ஆனால் நாட்டில் செஞ்சிலுவைச் சங்கத்தின் நடவடிக்கைகளை குறைத்துக் கொள்வதற்கு இது சரியான தருணமா என்ற கேள்விக்கு அவர் பதிலளிக்க மறுத்துவிட்டார்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஜெனீவா தலைமையப் பேச்சாளர் சைமன் சோர்னோ எதிர்கால நடவடிக்கைகள் குறித்து அரசுடன் தாங்கள் இப்போது பேச்சுவார்த்தைகளை நடத்தி வருவதாகக் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்னும் இலங்கையில் கவனிக்கப்பட வேண்டிய மனிதநேயப் பிரச்சினைகள் இருப்பதாகவே நாங்கள் நம்புகிறோம். அந்தப் பிரச்சினைகளை நாங்கள் இனிவரும் நாட்களிலும் தொடர்ந்து கவனிப்போம். எனவே செஞ்சிலுவைச் சங்கம் நாட்டைவிட்டுப் போகப் போவதில்லை.

நாங்கள் பொதுவாக அரசாங்கங்களுடன் இணைந்து பணியாற்றுகிறோம். இலங்கை அரசுடனும் இணைந்து பணியாற்றுவோம்.

எனவே எங்களது நடவடிக்கைகளை இதற்கேற்ப மாற்றியமைத்துக் கொள்வோம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளிற்கும் இலங்கை அரசிற்குமான போரின் இறுதி மாதங்களில் அரசிற்கும் செஞ்சிலுவைச் சங்கத்திற்குமான உறவில் முறுகல் நிலை ஏற்பட்டிருந்தது.

ஒரு மனிதநேயப் பேரழிவு ஏற்படுவதாக செஞ்சிலுவைச் சங்கம் கூறியிருந்தது.

இதனை மறுத்த அரசு, செஞ்சிலுவைச் சங்கம் பீதியைப் பரப்புவதாக கூறியிருந்தது.

ஆனாலும் போர் முடிபுற்ற பின்னர் போரினால் இடம்பெயர்ந்த மக்களிற்கு நிவாரண உதவிகள் வழங்குவதை ஒருங்கிணைப்பதில் உதவுவது, போரில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிகள் சர்வதேச சட்டங்களின்படி நடத்தப்படுகிறார்களா என்பதை உறுதி செய்வது போன்ற பணிகளில் ஈடுபட்டுவருவது குறிப்பிடத்தக்கது. (ச-14)

## கல்வி அமைச்சின்...

நேர்முகப் பரீட்சையை நடத்துவதற்காகவே அவர் யாழ்ப்பாணத்துக்கு வருகை தருகிறார்.

அவரின் விஜயத்தின்போது மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் மற்றும் கல்விப் பணிப்பாளர்களுடன் யாழ்.மாவட்டக் கல்வி நிலை தொடர்பாக ஆராய்வார். (ச-5)

## அதிபர் சேவை...

நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 20 ஆம் திகதி கொழும்பில் நடத்தப்படுமென பரீட்சார்த்திகளுக்கு அழைப்புக் கடிதங்கள் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து அழைக்கப்பட்ட 125 பரீட்சார்த்திகளின் போக்குவரத்துப் பிரச்சினைகளைக் கருத்திற்கொண்டு அவர்களுக்குக்கான நேர்முகப் பரீட்சையை எதிர்வரும் 27, 28ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு, கல்வி வலயங்கள் ஊடாக மேற்கொள்ளும் என்றார். (ச-5)


தகவல் தொழில் நுட்பத்தில் நீங்களும்
BIT
விஞ்ஞானமாணி தகவல் தொழில்நுட்பம்
Bachelor of Information Technology
University of Colombo School of Computing
விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது
Closing Date 14.07.2009
(A/L) எத்துறை சார்ந்த மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்
DIT ⇨ HDIT ⇨ BIT
Further More
- MCS offers to BIT student computer engineering Course. You also achieve MCP & MCTS Professional membership from MICROSOFT
- MCS offers COMTIA A+ module totally free
- MCS offers ICDL ( Computer Driving License)
- MCS offers CISCO-CCNA Course fees free
- E learning facilities also available

BIT பட்டமளிப்பில் சிறப்பு விருது பெற்ற நிறுவனம்
விண்ணப்படிவங்களிற்கும் பதிவுகளுக்கும்
MCS, 324, Palaly Road, Jaffna.
Supported by UNDP/JRRP



அடுத்த பிரிவு ஆரம்பம்
AAT, HNDA, Bcom. BBA பூர்த்தி செய்து பாடவிலக்கு பெற விண்ணப்பித்தவர்களும், புதிதாக விண்ணப்பிப்போரும் 14.07.2009 க்கு முன் உடன் தொடர்பு கொள்ளவும்.
CIMA
விபரங்களுக்கு நேரில்
MCS 324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
Supported By UNDP/JRRP
பரமேஸ்வரா சந்தி அருகில், Bus Root - 764


## உதவி நிறுவனங்களின்...

கட்டுப்பாட்டு மற்றும் புலிகள் கட்டுப்பாட்டு பிரதேசங்களுக்கிடையேயான பகுதிகளில் பிரசன்னமாகியிருப்பது, போர்க் காலங்களில் இறந்த இரண்டு தரப்பினரதும் உடல்களைக் கொண்டு செல்ல உதவுவது, பொதுமக்களுக்கான உணவு மற்றும் மருந்துப் பொருட்களை விநியோகிப்பது மற்றும் காயமடைந்த பொதுமக்களை அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குக் கொண்டுவருவது போன்ற வேலைகள் இனி இல்லாததால் புதிய சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு இந்த முடிபு எடுக்கப்பட்டது.

மனிதநேய நடவடிக்கை முடிந்துவிட்டது. எனவே அது போன்ற சேவைகளுக்கு இனித் தேவையில்லை. எனவே தான் செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் அதுபோன்ற பிற நிறுவனங்களிடம் அவர்களது பணியாளர்களது எண்ணிக்கை குறித்து மறு ஆய்வு செய்யக் கோரியிருக்கின்றோம்.

போருக்குப் பிந்திய காலகட்டத்தில் அவர்கள் செய்யப்போகும் பணிகளுக்கு ஏற்ப அவர்களது ஊழியர்களது எண்ணிக்கையை சீராக்கிக் கொள்ளுமாறு அவர்களிடம் கோரியிருக்கின்றோம்.

இந் நடவடிக்கை ஒரு இறையாண்மை பெற்ற அரசு அதற்குப் பெருமளவு உதவி செய்த நட்பு அமைப்பைப் பார்த்து கோரும் ஒரு நியாயமான கோரிக்கைதான் என்று அவர் தெரிவித்துள்ளார். (ச-14)

## நுகர்வோர்...

தெரிவித்தார்.

குறிப்பிட்ட பிரதேசங்களில் நுகர்வோர் அதிகளவில் பாதிக்கப்படுவதாகவும் அமைச்சர் கூறினார்.

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் பிரதேச செயலகங்களில் செயற்படத் தொடங்கும் போது மக்கள் தமது முறைப்பாடுகளை அங்கு தெரிவிக்க முடியும் என அமைச்சர் கூறினார். (ச-5)

## பொருட்களை அதிக...

யாழ். மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற யாழ். குடாநாட்டு மக்களின் வாழ்க்கைச் செலவைக் குறைப்பது தொடர்பான மாநாட்டிலேயே அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே இக் குற்றச்சாட்டைத் தெரிவித் தார்.

இம் மாநாட்டில் சமூக சேவைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நுகர்வோர் விவகார அமைச்சர் பந்துல குணவர்த்தன, தபால் தொலைத்தொடர்பு அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே, சுதேச வைத்தியத்துறை அமைச்சர் திஸ்ஸ கரலியத்த, கூட்டுறவு மொத்த விற்பனை சபைத் தலைவர், யாழ். அரச அதிபர் க.கணேஷ், யாழ். வணிகர் கழகப் பிரதிநிதிகள், யாழ். விவசாய சம்மேளனப் பிரதிநிதிகள், யாழ்.கூட்டுறவுத்துறை சார் பிரதி நிதிகள் மற்றும் வர்த்தகர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### தமிழில் பேசினார் அமைச்சர் மகிந்தானந்த

இம் மாநாட்டில் தமிழில் பேசிய தபால் தொலைத் தொடர்பு அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே கூறுகையில்,

யாழ். மக்களிடம் நான் கலந்துரையாடிய போது இங்கு அரிசி உட்பட பல்வேறு அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் பன்மடங்கு அதிகரித்த விலையில் யாழ். வர்த்தகர்கள் விற்பனை செய்வதை அறிந்து கொண்டேன். குறிப்பாக ஒரு கிலோ அரிசியின் விலை 120 ரூபாய் முதல் 145 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகின்றது.

ஆனால் கொழும்பில் 65 ரூபாய்க்கு அரிசி விற்பனை செய்யப்படுகிறது.

கொழும்பில் அரிசி விற்பனை செய்யும் விலையில் ஏன் யாழ்பாணத்தில் விற்பனை செய்ய முடியாது? தற்போது அரசாங்கம் நாளாந்தம் 20 முதல் 40 லொறிகள் வரை தினமும் ஏ-9 வீதியூடாக பொருட்களை எடுத்து வர அனுமதி அளித்துள்ளது.

இதன் மூலம் யாழ்ப்பாணத்தில் அத்தியாவசிய பொருட்களின் விலைகள் குறைவடைந்திருக்க வேண்டும். எனவே யாழ்ப்பாணத்தில் இம் மாத இறுதியில் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தை (சதோசா) ஆரம்பித்து பொருட்களை கொழும்பு விலையில் விற்பன்ன செய்யவுள்ளோம் என்றார்.

இதற்கு பதிலளித்த யாழ். வணிகர் கழக உப தலைவர் ஜெயசேகரம் கூறுகையில், யாழ். வர்த்தகர் ஒரு மெற்றிக் தொன்னுக்கு 75 டொலர் செலுத்தி கப்பல் மூலம் பொருட்களை ஏற்றி வந்தனர். இதனால் பொருட்களை கொண்டு வருவதற்காக அதிக செலவுகள் ஏற்பட்டதால் விலைகளும் பன்மடங்கு அதிகரித்து காணப்பட்டது.

தற்போது ஏ-9 வீதியூடாக தினமும் 20 லொறிகளில் பொருட்கள் எடுத்து வரப்படும் போதும் யாழ். குடாநாட்டிற்கு தினமும் 100 லொறிகள் வரை அத்தியாவசிய பொருட்களின் நுகர்வு காணப்படுவதால் நிரம்பல் போதாமல் உள்ளது.

அத்துடன் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கான லொறிக் கட்டணங்கள் ஒரு இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் வரை அதிகரித்துள்ளதாலும் ஓமந்தைச் சோதனைச் சாவடியில் பெருட்களை ஏற்றி இறக்க 15 ஆயிரம் ரூபாய் வரை நாட்டாமைக் கூலி செலுத்துவதனாலும் கொழும்பு விலையிலும் பார்க்க யாழ்ப்பாணத்தில் சற்று அதிகமான விலை காணப்படுகிறது.

அதனால் அமைச்சர் கூறியது போன்று யாழ்ப்பாணத்தில் அரிசியின் விலை 145 ரூபாய் இல்லை. 70 ரூபாய் முதல் 100 ரூபாய் வரையே அரிசியின் விலை காணப்படுகின்றது.

அத்துடன் யாழ்.வர்த்தகர்களுக்கு சொந்தமான 200 லொறிகள் தற்போது யாழ்ப்பாணத்தில் உள்ளது. இவ் லொறிகள் கொழும்புக்கு ஏ-9 வீதியூடாக சென்று பொருட்களை ஏற்றி வருவதற்கு அரசாங்கம் அனுமதி அளிக்குமாக இருந்தால் பொருட்களின் விலைகள் பெருமளவு குறைவடையும்.

மேலும் சீமெந்து உட்பட கட்டிடப் பொருட்கள் லொறிகள் மூலம் ஏ-9 பாதையூடாக எடுத்து வர தற்போது அனுமதி இல்லை. இதனால் கப்பல் மூலமே கட்டிடப் பொருட்கள் எடுத்து வர வேண்டி உள்ளதால் அவற்றின் விலைகளை குறைக்க முடியவில்லை என யாழ். வணிகர் கழக உப தலைவர் ஜெயசேகரம் விளக்கம் அளித்தார்

### தினமும் சேவையில் அதிக லொறிகள்

பாதுகாப்பு அமைச்சுடன் கலந்துரையாடி தினமும் ஏ-9 வீதியூடாக 60 லொறிகள் பொருட்களை ஏற்றி வருவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என வர்த்தக நுகர்வோர் விவகாரங்கள் அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாதுகாப்பு அமைச்சுடன் நாம் கலந்துரையாடி யாழ்.குடாநாட்டிற்கு ஏ-9 வீதியூடாக தினமும் 60 லொறிகளில் பொருட்களை ஏற்றி வருவதற்கு அனுமதி அளிப்பதற்கு விரைவில் நடவடிக்கை எடுப்போம். அத்துடன் லொறிக் கட்டணங்களை ஒரு இலட்சத்து 25 ஆயிரம் ரூபாயிலிருந்து 81 ஆயிரம் ரூபாய் வரை குறைப்பதற்கும் ஓமந்தை சோதனைச்சாவடியில் பொருட்களை ஏற்றி இறக்க நாட்டாமை கூலியை 8 ஆயிரம் ரூபாய் வரை குறைப்பதற்கும் நடவடிக்கை எடுப்போம் என உறுதியளித்தார். (ச-5)


YOGI'S BEAUTY
The Academy of Beauty Therapy, Hair Dressing & Home Science

குறுகியகால புதிய பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன
1. அழகுக்கலை பயிற்சிகள் (Beauty Culture -Facial Classes)
2. ஒப்பனை, தலை அலங்காரங்கள் (Bridal Make -up and Hair Styles)
3. மேலைத்தேய ஐசிங் அலங்காரங்கள் (Fondant Icing & Sugar Art on Fondant Strctures)
4. கேக் ஐசிங், மாச்சீனி மலர்கள் (Cake Icing and Sugar Flowers)
5. நவீன முறையில் 5 விதமான சாறிபிளவுஸ் கட்டிங்கள் (Latest Saree Blouse Cuttings)

ஆரம்பம்:- 11.07.2009 காலை 10 மணி
பயிற்சி முடிவில் Diploma சான்றிதழ்கள் வழங்கப்படும். ஆர்வம் உள்ளோர் உடன் தொடர்பு கொள்ளவும்.

MRS. YOGINI SHANMUGANATHAN
Diploma in Aesthetics & Cosmetology (India)
Diploma in Advanced Bridal Make -up & Character Make-up (India)
Diploma in Home Economics (India and Srilanka)
T.Phone:- 021 2222796, 0602210077, 0777164923, 0718788814

75, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(நல்லூர் வீரமாகாளி அம்மன் கோவில் முன்பாக)
(C-2730,இ)



நியூ சிற்றி ரேடர்ஸ்
சொனி, சொனிக்கா ரேடியோ, பனசொனிக் கசற், ரெக்கோடர், வோக்மன், கார் ரேடியோ, சொனி, பனசொனி L.G. கலர் T.V., சொனி, பனசொனி DVD பிளேயர், டிஸ் T.V, மெல்மேன் ரிசீவர், கிறைண்டர், சார்ச லைற், ரைஸ் குக்கர், பிறைசர் குக்கர், மண்ணெண்ணைய் அடுப்புக்கள், கொற்பிளேட், அயன், மேசை, சுவரை மின் விசிறிகள், வூபர்ஸ், அயன், சீக்கோ, சுவர், கை மணிக்கூடுகள், புட்போல், வொளிபோல், கரம் போட், அன்பளிப்பு, அலங்கார பொருள்கள் பெற்றுக் கொள்ளவும் மேற்குறிப்பிட்ட பொருள்களை சிறந்த உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ளவும் நாடுங்கள்.
நியூ சிற்றி ரேடேர்ஸ், 319 A, K.K.S. றோட், யாழ்ப்பாணம்.
T.P:- 021 222 3226
மேற்படி ஸ்தாபனத்திற்கு வேறு கிளைகள் இல்லை.
(மேற்படி ஸ்தாபனம் ஸ்ரான்லி றோட், கே.கே.எஸ். றோட் சந்தியில் இருந்து 6ஆவது கடை)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.07.2009இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.